உ

ஜோதிமயம்.

இரஞ்சித போதினி

கதை, கர்வ்யம், சரித்திரம், நவீனம், புராணம், இதிகாசம், அனுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு வெளிவரும் ஓர் மாதந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." (திருவள்ளுவர்.)

ஆசிரியர் :—தமிழ்ப்பூஷணம் ஸ்ரீ வாசுதேவ ராவ் கேய்க்வார்.

தொகுதி 2	இரக்தாக்ஷி ஹு கார்த்திகை மீ 1924 ஹு நவம்பர் மீ	பகுதி 10

கடவுள் வணக்கம்.

சோதி மகரக் குழைசெறிசுந் தரத்தோ ளீரா றுடையானைச் [தானை
சுருதி யிரைக்குந் தண்டையந்தாட் டுணையென் முடியிற் பொறித்
மாது வள்ருஞ் சமரபுரி வாழ்வை வானோர் சிகாமணியை
வடிவே லரசை மயிலரசை வந்து புறங்காத் தளித்திடுமா
லாதி பகவன் ஞானவடி வழுயிற் பூத்து நித்தியமா
யணிந்தோர் தமக்கு வசிகரமா யருந்தி னோர்கட் காரமுதாய்
நீதியறியும் பசுமலத்தை நீக்கு மொருநற் குறிகாட்டி
நிகழ்பே ரின்பக் கடலூட்டி நின்ற புகழ்வெண் டிருநீறே.

தயாராகிவிட்டது! நூதன பதிப்பு. தயாராகிவிட்டது!

ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

அருட்பா

- ரப்பு காகிதம் அழகான காலிக்கோ பைண்டு விலை. ரூ 5
- கிளேஸ்காகிதம் அழகான காலிகோ பைண்டு விலை ரூ. 7

☞ ஒவ்வொரு சிவபக்தர்களிடம் இப்புஸ்தகம் அவசியம் இருக்க வேண்டியது கொஞ்சம் காபிகளே அச்சிடப்பட்டதால் ஒவ்வொருவரும் முந்திக்கொள்வது நலம்

விலாசம் : இரஞ்சித போதினி ஆபீஸ்,
சௌகார்பேட்டை, சென்னை.

இரஞ்சித போதினி

இரக்தாக்ஷி௵ கார்த்திகை௴ 1924௵ நவம்பர்௴

ஸ்வயராஜ்யத்தின் சூக்ஷமம்

IV

(உ) சுதேசவஸ்துவையறிதல்.

நமது நாடு தற்சமயம் க்ஷீணதசை யடைந்ததற்குக்காரணம் யாதெனில் நம் நாட்டுக்கைத்தொழில்கள் அருக்கிக்கிடப்பதோடு, ஒன்றிரண்டு தொழில்களையும் புறக்கணித்து பிரதேசவஸ்துக்களை வாங்குவதேயாகும். இதில் இன்னொன்றும் கூறவேண்டியதுண்டு. அதாவது: நம் நாட்டுத்தொழில் மேலோங்கி வளராமல் க்ஷீணமெய்துவதற்குக் காரணம் நம் நாட்டவர்களால் உற்பத்தி செய்யப்படும் வஸ்துக்கள் தினே தினே விருத்தியடையாமல் குன்றிப் போகும்படியான நிலைமை யேற்பட்டு விடுவதினாலும், தொழிலாளர்கள் காலத்திற்கேற்க மாற்றி சூக்ஷ்ம நெறிகளைக்கைப்பற்றி வஸ்துக்களை வகையோடும், வாங்குபவர்கள் விரும்பும் வண்ணமும் செய்யாமையேயாகும். இது கொஞ்ச லாபம் கைக்குக் கிட்டியவுடன் நமது நிலைமையைக் கவனியாமையும் அஹம்பாவம் கொள்ளுதலுமேயாகும். எப்பொழுதும் நாம் ஒருவிஷயத்தைச் செய்யமுற்பட்டால் அதன்முடிவு தெரியும் வரையும் பாடுபட்டே யாகவேண்டும். இதற்குத்தான் ஸ்திரமான வைராக்கியம் எனப்படும். இத்தகைய வைராக்கிய மில்லையெனின், நாம் எப்போதுமே விருத்தியடையமுடியாது. முயற்சியே இதற்கு முக்கியம். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்றும் 'முயற்சி தன் மெய் வருந்தக் கூலிதரும்' என்றும், 'முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' என்றும், முயற்சியானது மானிடரின் முதன்மையும் முக்கியமுமான ஆபரணமென்றும், முயற்சி யெப்பொழுதுமே ஒருவனுக்கு உபகாரமானதென்பதும் திண்ணமன்றோ? முயற்சி யென்ற விஷயத்தைக் கூறப்புகுந்த நாயனாரும் 'தெய்வத்தாலாகாத விஷயத்தையும் முயற்சி கூட்டுவிக்கும்' என்று கூறுகின்றாராயின் முயற்சியின் பெருமையை நம்போலியர் விவரித்துரைப்பதெவ்வண்ணமோ ?

இடையில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு மேலே செல்லுவாம். தற்காலம் நமது நாட்டுத் தமிழரொவ்வொருவரும் திருக்குறள் என்னும் நூலை நன்றாய்ப் படித்து மனனம் செய்துகொள்வார்களாயின் அவர்கள் தற்காலம்நடைபெறும் இராஜீயசம்பந்தமான விஷயங்களில் ஈடுபடுவதோடு தங்களுக்கு வேண்டியதான ஸ்வதந்தரத்தையடையும் நெறியையும் தெரிந்து ஒழுகுவார்கள். ஆதலால் இன்றுமுதலே ஒவ்வொருவரும் குறளைப் படிக்கவேண்டுமென்று கூறுகின்றோம். நிற்க,

ஸ்வதேசத் தொழிலாளிகள் தங்கள் தொழிலபிவிருத்தி யெய்த வேண்டுமென்னும் நோக்கத்தை மனதிற்பதித்துக் கொண்டும் கால தேச வர்த்தமானங்களை யனுசரித்தும் தம்மாற் செய்யப்படும் தொழிலை நடத்த முற்படவேண்டும்.

வஸ்துக்களைக் கொள்பவர்களும் புராதன நாகரீகத்தைவிருத்தி செய்து நம் நாடு விருத்தியடையவேண்டி நம் நாட்டில் கிடைக்கும் வஸ்துக்களை வாங்கி யாதரிக்க முற்படவேண்டும். நவீன நாகரீகத்தின் வயப்பட்டு நம் நாட்டுக் கைத்தொழில்களை யாதரிக்கப் பின்வாங்குவார்களானால் நமக்கு க்ஷீணதசை நிலைக்குமேயன்றி ஸ்வதந்தரம் ஏற்படவே ஏற்படாது.

ஆகையினால் ஒவ்வொருவரும் பரஸ்பரம் இவ்விஷயத்தில் சிரத்தையுடையவர்களாயிருந்து பரதநாட்டில் உற்பத்தியாகும் வஸ்துக்களைப் பரதநாட்டில் பண்படுத்தி, பரதநாட்டினருக்கே உபயோகப்படும்படி செய்வார்களாயின், பரதநாடு சில நாட்களிலே உலகத்தில் முதன்மைபெற்ற நாடாய் விடுமென்றோ ?

உதாரணமாக, நமது நாட்டில் கதர் உற்பத்தி செய்யப்பட்டு இலக்ஷத்திற்கு ஒருவர் உபயோகிக்கத்தலைப்பட்டதன் காரணமாக அந்நிய நாடுகளில் முதலாளிகளுக்கு நஷ்டமும், தொழிலாளிகளுக்குத் தொழிலின்மையும் ஏற்பட்டு கூக்குரலதிகரித்து அக்கூக்குரல் இந்தியாவுக்குக் கேட்கின்றதெனின், நம்மவர்களில் கால்வாசி ஜனங்கள் உபயோகப்படுத்தினால்—அரைவாசி ஜனங்கள் உபயோகப்படுத்தினால்—முழுஜனங்களும் உபயோகப்படுத்தினால் மற்ற நாடுகளின் கதி யாதாகுமென்பதைச் சிறிது சிந்தித்து நோக்குங்கள்.

ஆகையினால் இனியேனும் நம் நாட்டுக் கைத்தொழில்களை யாதரிக்க முற்படுவோமாக. பத்திரிகாசிரியர்.

இராமச்சந்திரன் கானேக்கிச் செல்வதைப்பற்றி ஆக்ஷேபணை சமாதானங்கள்

அல்லது

பகவத் கீதோபதேசம்.

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

"உனக்கு உண்மையில் என்னிடம் ஸதா பக்தியிருக்கிறதென்று தெரியும். லக்ஷ்மணா! ஸ்திரீ ஜாதியான என்னுடைய மாதாவுக்கு என்னுடைய நிஜமான அபிப்பிராயம் தெரிந்துகொள்வது கூடாத காரியம். அப்படியிருக்க, நீயும் என்னுள்ளத்தை யறியாமல் மாதாவுடன் சேர்ந்து என்னை வருந்துமாறு செய்கின்றனை. தர்மார்த்த

காமத்தை யனுபவிப்பதே சுகமென்று எல்லாரும் நினைக்கின்றனர்.
நாம் தர்மத்தையே ஆசிரயித்து தர்மத்தினின்றும் பிசகாம லொழுகு
வோமாகில் சகலபோக பாக்கியங்களும் கிடைக்கும். சாதுவும்
ஒற்றுமையுமான பத்னிகிடைத்தால் தர்ம காரியங்கள் செவ்வனே
நடைபெறும். பத்னி எழிலுள்ளவளாயிருந்தால் காமசுகமும் புத்தி
ரோற்பத்தியு முண்டாகும், எந்த தர்மங்களைச்செய்தாலும் தர்மம்
காமம் அர்த்தம் இம்மூன்று மிருத்தல் வேண்டும். தர்மமட்டிலிருக்
கும்படியான கர்மங்களைச்செய்யினும் நலமே. தர்மமின்றி கேவலம்
அர்த்தபரனாயிருப்பவனை உலகம் நிந்தனை செய்யும். அவ்வாறே
தர்மமில்லாத காமபரனாயிருந்தாலும் உலக நிந்தையேதான். ஆகை
யால் தர்மமில்லாத இந்த ராஜ்யம் எனக்கு வேண்டுவதில்லை. பரதன்
ராஜ்யமாள வேண்டு மென்று அரசன் (பிதா) சொல்லிவிட்ட
பிறகு, அந்த பித்ருவாக்கியத்தை பரிபாலிப்பதே தர்மமான காரியம்.
ராஜனும், பிதாவும், குருவும், விருத்தரூபமாயிருப்பவர் சத்தியத்தை
நிலைநிறுத்தும் பொருட்டாய் பரதனுக்கு ராஜ்யமென்றும், எனக்கு
வனவாஸமென்றும் சொல்லியிருப்பது, குரோதத்தினாலாயினும்,
காமத்தினாலாயினும், கோபத்தினாலாயினும், அந்த வாக்கிய பரிபால
னமே தர்மம். சாதுவின் தன்மை பிதுருவாக்கியத்தைக் கேட்பதே
யாம். அவருடைய வார்த்தையை தயவில்லாமல் தள்ளிவிடும்படி
யான கண்டகசுபாவமெனக்கில்லை. அப்பா லக்ஷ்மணா! கைகேயி விஷ
யமாய்ப் பிதாவினால் செய்யப்பட்டிருக்கிற கட்டளையை மீறி நடக்க
எனக்கிஷ்டமில்லை. செங்கோலோச்சும் சக்ரவர்த்தியும் பிதாவுமான
வருடைய வார்த்தையை அவமதித்தல் கூடாதகாரியம். அவருடைய
கட்டளைப்படி நடந்துதானாகவேண்டும். பர்த்தாவை யனுசரித்து
ஸ்திரீகளிருக்கவேண்டிய தர்மத்தைவிட்டு, அவரையும் விட்டுப்பிரிந்து
மாதாவானவள் என்னுடன்கூட வனத்திற்கு வரவேண்டிய நியாய
மென்ன? பிரபுவான ராஜா ஜீவந்தராயிருக்கையில் அவரைவிட்டுப்
பிரிந்திருக்கவேண்டிய நியாயந்தானென்ன? பர்த்தாவுக்குப் பிந்தி
யன்றோ ஸ்திரீகள் புத்திரனிடமிருக்க வேண்டியவர்கள். புருஷனை
இழந்த கைம்பெண்ணன்றோ புத்திரனுடன் வசிக்கவேண்டும். இத்
தகைய ஹேதுக்களினால் தீர்க்க சௌமங்கல்யத்தைக் கொண்டிருக்
கும் நமது அன்னையார் *நம்மை மங்களகரமா யாசீர்வதித்து வனம்
செல்லுமாறு விடைதந் தனுப்பவேண்டுமன்றோ! பூர்வத்தில் யயாதி
சுவர்க்கம் போய், மீண்டும் யிவ்வுலகம் வந்து தம் பௌத்திரர்களு
டைய புண்ணிய பலத்தினால் எப்படி சுவர்க்கஞ் சென்றனரோ, அப்
படியே, அம்மா! தங்களுடைய ஆசீர்வாதத்தினால் நான் பதி
னான்கு வருஷங்களையும் வனத்தில்கழித்து மீண்டும் பட்டணம் வந்து

---

* லக்ஷ்மணனுடைய மனோ நிச்சயத்தைத் தெரிந்த பகவான் சீதையின் மனோ
திடத்தையுங்கண்டு தான் எனக்கூறாது "நம்மை" என்று பகுவசனப்பிரயோ
கஞ் செய்தனர்.

சேருகிறேன். தர்மமில்லாத கேவலமான இந்தராஜ்யத்தின்பொருட்டாய் யசஸை விட்டுவிட மனந்துணியவில்லை. க்ஷத்திரிய தர்மமான ராஜ்யத்தை வேண்டாமென்று சொல்லலாமோவெனில், தர்மமல்லாத பிதுர்வாக்கியத்திற் கன்யதாவான இந்த ராஜ்யத்திலிருக்க இஷ்டமில்லை. ஆகையால் அநுக்கிரஹம்பண்ணி வனச்செல்ல விடையளிக்குமாறு பணிந்து வேண்டிக்கொள்ளுகின்றேன்" என்று பகவான் ராமச்சந்திரன் கௌசல்யா தேவியாரின் சன்னிதானத்தில் லக்ஷ்மண சுவாமியின் கோபத்தையும் சாந்தப்படுத்தப்படியாய் உபதேசம் பண்ணினார்.

மீண்டும் லக்ஷ்மணனை நோக்கி, "லக்ஷ்மணா! வீணில் கோபம் வேண்டாம். துக்கமும் வேண்டாம். மனதை தைரியப்படுத்திக் கொள். இப்பொழுது நேர்ந்திருக்கும் பிதாவின் கட்டளையினால் எனக்கு அவமானம் லேசமுமில்லை. நீயும் அவமானமடையவேண்டாம். துக்கத்தை எட்டத்தள்ளி சந்தோஷத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளவேண்டும். அபிஷேக நிமித்தம் நான் செய்துகொண்டிருக்கும் இந்த அலங்காரத்தைக் கலைத்துவிடு. வனவாஸ யோக்கியமாம் பிரயத்தனஞ்செய். என் அபிஷேகத்தின் பொருட்டு கைகேயிதேவியாரின் மனம சந்தேகப்பட்டு மனம் வருந்தியுறும் துன்பத்தை நிவர்த்தி செய்வதற்காக சீக்கிரம் வனஞ்செல்ல வேண்டிய ஏற்பாடுசெய், நான் வனம் போவேனோ போகாமலேயிருந்து விடுவேனோ என்கிற பெருத்த சந்தேகத்தினால் கைகேயிதேவியார் மனமிகவருந்திச்சாம்பி தவிக்கின்றனர். அவர் அவ்வாறு மனம் வருந்துவதில் எனக்குச் சிறிதுமிஷ்டமில்லை. நான் இங்கு நிமிஷத்திற்றானே வனஞ்செல்லப் பிரியப்படுகின்றேன். நான் தெரிந்துந்தெரியாமலும் நம்முடைய தாய்மார்களுக்காயினும் தந்தையருக்காயினும் மனவருத்தத்தைக் கொடுக்குபபடியான அபராதம் லேசமும் செய்தேனில்லை. இப்பொழுதும் கைகேயிதேவியார் என் நிமித்தமாய் மனம் வருந்திச்சாம்பித் தவிக்க வேண்டாம். சத்தியசந்தராம் பிதாவும் பரலோகஞ் சித்திக்குமோ சித்திக்காமற போய்விடுமோ வென்று என்பொருட்டாய் பீதியடைந்து இருக்கிறவரை பீதியில்லாதவராய்ச் செய்யவேண்டும். கைகேயிக்குத்தான் சந்தேகமென் றெண்ணவேண்டாம். நம்முடைய பிதாவுக்கும் ஒருகால் தம்முடைய சத்தியந் தவறுமோ வென்ற சந்தேகமிருக்கலாம். அவ்வித சந்தேகத்தை நாம் இந்தநொடியிற்றானே நிவர்த்தி செய்யாமலிருந்தோமேயானால், அவருக்கு மனஸ்தாபந்தான். ஆகையால் முக்கியமாய் அவருடைய சத்தியத்தை நிலைநிறுத்தும்படியாக நான் கொஞ்சமும் தாமதியாமல் வனஞ்செல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நான் வனஞ்சென்ற பிறகுதான் கைகேயி அம்மைக்கு மனங்குளிரும், கிருதகிருத்தியாவர், மனக்கலக்கமில்லாமல் தம்மருஞ்செல்வனும் பரதனுக்கு முடிசூட்டுமாறுசெய்வர். நான் இந்த ராஜாலங்காரத்தைக் கலைத்துவிட்டு, ஜடாமண்டலதாரி

யாய், மரவுரிதரித்து வனஞ்சென்றபிறகே நம்சிற்றன்னையார் கைகேயி தேவியார் தமக்கு சுகமென் றெண்ணுவர். நானிங்கு தங்கும் வரையில் அவருக்கு மனவருத்தமேதான். அப்படி மனம் வருந்தும்படி விட எனக்கிஷ்டமேயில்லை.

மேலும் என் சித்தம் சிறிதும் சலிக்காமல் வனம் போவதிலேயே உறுதியாயிருக்கிறது. மனித ஸ்வபாவப்படி சித்தஞ்சலித்து, புத்திகெடுவதற்கு முன்னதாகவே நான் வனஞ்செல்ல நினைக்கின்றேன். இதற்கெல்லாம் நம்முடைய பூர்வவினைதான் காரணம். அதைத்தான் அதிர்ஷ்டம் என்று சொல்லப்படும்; அதிர்ஷ்டம் என்பது அதிருச்யமாயிருப்பது; எதிர்பாராமல் சம்பவிக்கும்படியானது இப்பொழுது நான் வனம் போகவேண்டுமென்று நேரிட்டிருக்கிற அதிருஷ்டத்திற்கு கைகேயிதேவியார் காரணமில்லை மகாராஜா என்னை வலுவிலழைத்து கொடுத்த ராஜ்யம் என்னைவிட்டுப் போக தைவந்தான் காரணம். தைவசங்கல்பத்தினால் கைகேயி தேவியாருடைய மனதில் தைவமே புகுந்து நான் வருத்தமுறுமாறு செய்ய நினைத்தனரேயல்லாமல், வனஞ்செல்வதில் எனக்கு வருத்தம் லேசமுமில்லை. நான் என்னுடைய எல்லா மாதாக்களிடத்திலும் வேற்றுமை சிறிதும் பாராட்டாமல் விசுவசிக்கும் தன்மை வாய்ந்தவன். நான் கைகேயி தேவியாரிடம் மிகுந்த பயபக்தி விசுவாசமுள்ளவன்தான். அவருக்கும் பரதனைக்காட்டிலும் என்னிடம் மிகுந்த அன்பும் வாத்ஸல்யமும் உண்டு. அப்படியிருந்தபோதிலும், இப்பொழுது என் விஷயத்தில் நிஷ்கண்டகமாய் அவர் நடந்துகொள்வது அவருடைய சுவயமில்லை. தைவ சங்கல்பமேதான். ஆகையால் அவரிடம் கோபம் வேண்டாம். அந்த அம்மாள் நற்குணமுள்ள மகாராஜனுடைய புத்திரிதான்; நல்ல உத்தமி, கற்பில் சிறப்பெய்தியவள்! பர்த்தாவின் மனங்கோணாமலொழுகி வந்திருக்கும் சீலவதியே. அப்படியிருக்க, சாதாரணமான ஒரு ஸ்திரீயைப்போல், அதாவது நற்குணம் படைக்காத பெண்ணைப்போல் தம்பர்த்தாவான மகாராஜாவின்முன் எனக்குப் பீடையுறும்படியான காரியத்தில் மனந்துணிவடைந்து சாஹஸஞ் செய்யலானது தைவப் பிரரேபணையே யல்லாமல் வேறில்லை. தைவமானது சமஸ்த பூதங்களிடத்திலேயும் தன் சாமர்த்தியத்தைக் காட்டிவிடுகிறது. அதிகப் பிரியமுள்ளவரான கைகேயி அம்மை என்னைநோக்கி தாக்ஷண்யலேசமும் கிருபையு மில்லாதவராய் வனம் போகக்கடவதென்று உத்தரவிட்டதுதைவசங்கல்பம். தைவபலத்தை எதிர்க்க யாராலுமுடியாது, தைவம் எதிரில் காணப்படின் எதிர்க்கலாம். காரியாகாரியத்தினால் தைவத்தை அறியலாமேயல்லாமல் வேறுவிதமாய் தைவத்தை நேரில் காண முடியவே முடியாது. மனிதனுடைய லாபம் நஷ்டம், சுகம் துக்கம், உயர்வு, தாழ்வு, உக்கிரமாய்த் தவம்புரியும் மகரிஷிகட்கும் அவர்களுடைய தவம் முற்றுப்பெற்று

இஷ்ட பூர்த்தியாகாமல் போய்விடும் ; அதுவும் தைவபலமேதான். சதாநந்தர் நமக்குச் சொல்லிவந்த விஸ்வாமித்திரருடைய பிரபாவத்தைக் கேட்டபிறகும், உனக்கேன் சந்தேகம்! ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யத் தீர்மானிக்கிறான், அதுமாறி அவன் நினையாத வேறு ஒரு காரியம் வந்து சம்பவிக்கின்றது; அப்படி நாமொன்று நினைக்க நடப்பதொன்றுமாக முடிவதே தைவ சங்கல்பம் என்னப்படும். அப்பா, லக்ஷ்மணா! உன் சுய புத்தியைக்கொண்டு ஆழ்ந்து யோசித்துப் பார்! நான ராஜாவின் கட்டளையினால் அபிஷேகாலங்காரம் பண்ணிக்கொண்டுவந்தேன். எவ்வளவு யோசனையின்பேரில் எனக்கு பட்டாபிஷேகம் என்று ராஜஸ்தானியில் தீர்மானிக்கப்பட்டது தெரியுமோ! அது திடீரென்று மாறுதலடைந்து நான் வனஞ்செல்லுமாறு முடிந்தது ! இவ்வாறு முடிந்ததே தைவசங்கல்பம். ஒருவன் தான் நினைத்த காரியம் கைக்கூடினால் நல்ல அதிருஷ்டமென்றும், அந்த காரியமாகாவிட்டால் துரதிர்ஷ்டமென்றும் உலகவியற்கையாதலால், எனக்கு அபிஷேகம்நின்று வனஞ்செல்லநேரிட்டது. அதுவே துரதிருஷ்டம். அதைப்பற்றி எனக்குப் பரிதாபமேனும், துக்கமேனும், சந்தோஷமேனும் ஒன்றுமேயில்லை நடக்கவேண்டியதுதான் நடக்கும், ஆகையால், அப்பா, தம்பி! லக்ஷ்மணா! நீ என் மனப்படி நடக்க முயன்று நான் வனம்போகவேண்டிய காரியத்திற்கு வேண்டிய ஜாக்கிரதை செய்வாயாக. (தொடரும்),

துறையூர் மா. சுப்பராமய்யர்.

ஸ்ரீபழனியாண்டவர் திருவருட் பாசுர அந்தாதி

(331-ம் பக்கத் தொடர்ச்சி)

12 தனிப்பொரு ணீயெனத் தக்க விதமாய்த் தனித்துணர்ந்தும்
இனிப்பொருள் வேறே யிருக்கு தெனவே இருதயத்திற்
றுனிப்பொடு கூடுங் குணத்தைத் திருத்திக் குலவிடுமுன்
நனிப்பத மீவாய் நமர்வாழந் திடவே நயந்தவனே.

13 நயந்தவ னேயென் னலிவினை நாடா நலமிலியைப்
பயந்தவ னேயுன் பதயுக மாமலர் பண்புறவே
வயந்தர வேண்டு மகிதல மாந்தரை வாழவருண்
மயந்தர வல்லாய் மதியணி வானவன் மாமகனே.

14 மாமக னென்றே மதித்துத் துதிக்க மகிதலத்தே
பூமகன் சான்றுய்ப் பொருந்திய பொற்புப் புதிதலவே
கோமகன் வாழ்க்கொ டியபுன் சூரனைக் கொன்றவனே
நேமகஞ் செய்வாய் நினைவுனை யன்றி நெகிழ்ந்திடாதே.

15 நெகிழ்ந்திடா ஞேப நினைவே நிலைக்க நினதருளை
மகிழ்ந்திடா மாயம் வகுக்கும் வகையறி வாரிலையே
பகிர்ந்திடா மாமதி போன்ற பலவிதப் பாவையரின்
வகிர்ந்திடா நின்ற மலர்க்குழற் கீழுறு மாமுகமே.

16 மாமுக மென்றே மதிமயங் கிப்புவி மாக்களுமே
நோமுக மெய்துவர் நுண்ணறி வின்றி நுகர்நலத்தாற்
பூமுகம் நண்ணுவர் பொற்புள தேவரும் போற்றுகின்ற
தேமுகங் காணாச் சிறுமை வினைசெய்யும் சீர்மையிதே.

17 சீர்மை யுளநின் சிலம்பணி தாளைச் சிறப்புறவே
கூர்மை யுளதன குணமெனக் கொள்ளாக் குறையதனை
நேர்மை யுறவுனை நித்த நித்தந்தம் நினைவகத்துத்
தேர்மை யடைதல் சிவசுப் பிரமணித் தேவருளே.

18 தேவருள் காணச் செகமுள மாந்தருஞ் சிற்றறிவாற்
பாவருள் காட்டிப் பணிந்திடப் பாதகப் பாழ்மனதில்
மூவருட் டோன்றி முளைத்த முகற்பர மூர்த்திநின்றன்
நாவருள் நன்னய நாட்டிடைச் சேர்த்திட நாட்டிடுமே.

19 நாட்டிடு வார்தமை நண்ணா திருந்தால் நளினமலர்
காட்டிடு பாதங் கடுமை யெனக்கருள் காண்பியாவென்
றேட்டிடு சொல்லே யிதமென வெண்ணி யிடர்படவே
யாட்டிடு வாயோ வருணா சலத்தான் அளிசுதனே.

20 அளிசுதன் நீயென வன்றர னார்த னருட்குருவாய்க்
களிசுதை யீதெனக் காட்டிய வாறு கடையுகத்தே
விளிசுதன் யாதும் விரும்பா வரத்தை விரும்பிடவே
அளிசுதை தேரு மடைவினிற் காட்டியே யாண்டவனே.

21 ஆண்டவ னேயெனு மன்பா லடைந்தவ ரம்பலத்துத்
தாண்டவ னேயெனச் சற்குரு வாகவே சாற்றமிதம்
பூண்டவ ளோநின் புரணவொ ளியெனும் பூரணத்தை
வேண்டவ ருள்குக மேலாம் விளைசுக வீடடைவே.

22 வீடடை வாயென வேட்டொரு நாளில் வெளிப்படவே
நாடடை வாயென நாட்டிய நின்னரு ணானினைந்தாற்
காடடை மாதவர் காணாக் கழலிணை கண்டிடநின்
பீடடை பாக்கியம் பெற்றிட லானேன் பெரிதுவந்தே.

23 பெரிதுவந் துன்னருள் பேணிப் பிரியமாய்ப் பேருலகிற்
புரிதவம் யாதெனப் பந்தியி னோர்ந்த புனிதமதே
சரிதவம் வேறிலை சான்றதே மாமறை சாற்றுவதும்
அரிதவம் வாணா ளகற்றிட லார்கலி யம்பரத்தே.

24 அம்பரம் நீயென் றறியாத் திரத்தா லவனியிடைத்
தம்பரம் வேறெனச் சாற்றிச் சுழக்கரிற் சார்ந்திடுங்கால்
நம்பர மீதென நாடா நகைமதி நங்கைபரே
எம்பர மென்றே யிறமாந் திருந்தே யிடர்படுமே.

25 இடர்ப்பட நீதா விழிவா யெனில்யான் இனியசுகந்
திடப்பட மாட்டேன் சிறியார் பிழையது செய்திடுங்காற்
றொடர்ப்பட நேர்ந்துஞ் சுருதிக் கிசையத் துயர்கடலிற்
படப்பட நோக்கல் பழியுனக் கன்றோ பதியலையே

26 பதியா முனையே பசுவா மெனது படர்வினையால்
விதியாய் நிகழ்ந்த விளைவறி யாமல் விமலசுகக்
கதியாய்த தொழவே கருதா வுளத்திற் கருமமதைப்
பதியா வரத்தைப் பழியா தருளப் பதம்பணியே

27 பதம்பணி வானவர் பாங்கிற் றுதிக்கப் பரவுமுன்றன்
சிதம்பர நாதன் றிருச்சபை சேர்ந்து தினம்பணிய
இதம்பெறு மாயை எனதுள் ளிருக்க விடர்க்கடலில்
நிதம்பணி செய்வ தெவனே நினைகுக நின்மலனே

28 நின்மல னீப லாதீத முளாரிந் நிலவுலகிற்
றன்மல நீங்காத் தரத்தின ராமோ சராசரமும்
சொன்மல நீக்கத் துதித்திடுங் காலவர் சொற்பொருளாய்ப்
பொன்மல மில்லாப் பொருளெனக் காட்டிடு புண்ணியனே

29 புண்ணிய மில்லார் புரியார் தவமதைப் போதசுகம்
நண்ணிய பேர்களே நன்மையின் மிக்கார் நடுவனிடம்
அண்ணிய நாள்வரு மன்ற நினைத்தா லடைவதன்றோ
கண்ணிய மாமறை காணு பதத்தைக் கருத்துறவே.

30 கருத்துறக் கேட்டுக் கருதிக் கதியைக் கடைமுறையிற்
றிருத்துறக் காணுஞ் சிவகதி சேர்தல் சிறிதுமிலார்
பெருத்து வாழ்ந்தும் பெரிய பெருமாள் பிரிவதற்ற
பொருத்துற நாடார் புகும்வழிக் கேது பொருளுளவே

31 பொருளுள வென்றே புவியிற் புகுந்தபின் பொய்ப்பொருளின்
மருளுளங் கொண்டே மயங்கித் தவித்து மறுவுலகின்
றெருளதைக் கேளார் சிறியார் மதிக்கச் செறிவதல்லால்
அருளுற நோக்கார் அடைவது மென்றோ அரிமருகே.

(தொடரும்).

A. சிவசூரியம் பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர், ஆனைமலை.

கற்பு

கற்பென்பது பெண்களின் பதிவிரதா தர்மம் என்று பொருள். பெண்களுக்கு கற்பாவது விவாகஞ் செய்யுமுன் பிதா மாதாக்களாலும், விவாகஞ்செய்தபின் கணவனாலும், கற்பிக்கப்பட்டபடியே நீதி வழுவாமல் ஒழுகுதலாம் ஸ்திரீகளின் கற்பு பாலியத்தில் பிதாவாலும் யௌவனத்தில் புருஷராலும், விருத்தாப்பியத்தில் புத்திரர்களாலும் காக்கப்படுகின்றது. இவ்விதம் இவர்களால் காக்கப்படினும் ஸ்திரீகள் தங்கள் கற்பைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டியது முக்கியமானது.

உலகில் பெண்கள் பற்பல ஆபரணங்கள் அணிகின்றனர். அவற்றுள் சிறந்தது கற்பென்னும் அரிய ஆபரணமேயாம். மற்ற ஆபரணங்கள் கடையில் வாங்கலாம். ஆனால் கற்பென்னும் ஆபரணம் கடையில் வாங்கமுடியாது இது பெரும்பாலும் இந்து தேசத்துப் பெண்களிடமே குடிகொண்டது.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
திண்மை யுண்டாகப் பெறின்"

என்றபடி ஒருவன் அடையக்கூடிய பெரும்பேறில் கற்புடை மனைவியை அடைதல் ஒருபேறுகும்.

நாயகன் கெட்ட நடவடிக்கை யுடையவனயிருந்த அவனை நாயகி அநுசரிப்பாளானல் நாயகிக்கு அதனல் பாபமொன்றுமே நேராது கணவன் எப்படி யிருந்தாலும் நாயகி அவனைப்பழிக்காமல் அநுசரித்தே நடக்கவேண்டுமென்பது பதிவிரதா தர்மம். மேலும் நாயகன் செய்யும் புண்ணிய கர்மங்களிலே பாத்தியமில்லை யென்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். இதனையன்றி நாயகி தன் கற்பைக்காத்து வருவாளானல் நாயகன் எவ்வளவு தீயவனயிருந்தாலும் அவன் சகல பாக்கியங்களையும் அடைவானென்று பெரியோர் கூறியிருக்கின்றனர். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் நடத்துவதின்பொருட்டு விராடநகரில் பிரவேசிக்க ஆலோசிக்கையில் தரும புத்திரர் பாஞ்சாலியைப் பார்த்து மாதே! மழையினலே மாநிலம் தழைக்கிறது. மழையிலே உலகம் சகல நன்மைகளையும் அடைகின்றது இந்த அரிய நன்மைக்குக் காரணமான கற்புடைய மாதை மணந்தவன் விற்பன விவேகங்களை யடைவான். ஆதலின் உன் கற்பைக் காப்பாற்றிக்கொள். நாம் சகலபாக்கியங்களையும் அடையலாம் என்று புத்திமதிகூறினர்.

ஆகவே நாயகியின் கற்பினல் நாயகன் பாபம் நீங்கி நன்மை பெறுவது கூடுமென்று நாம் அறியலாகனேம். ஆதலால் நாயகி நாயகனை எவ்வாற்றானும் அநுசரித்து நடத்தலே சிறந்ததாம். இதனலே தான் ஔவைப்பிராட்டியார்

" பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலும் கூடி வாழலாம்—சற்றேனும்
ஏறுமா ருக யிருப்பாளே யாமாயின்
கூறுமற் சந்நியாசங் கொள்''

என்று போதித்துள்ளார்.

மாதர்களுக்கு கணவனை யொத்த நல்லகதி வேறொன்றுமில்லை. கணவனுடைய பூரணமான அன்பைப்பெறும் மாது உயிரோடுகூடி வாழும் நாளிலும், இறந்தொழிந்தநாளிலும் சுகமேபெறுவாள்.

கற்புடைய மகளிரானவள் தெய்வத்தை வணங்காளாகிலும் தனது தெய்வமாகிய கணவனை வணங்கி நித்திரை விட்டெழுந்திருப்பவள பெய்யென்று சொல்ல மழையானது பொழியும். ஸ்திரீகளுக்குக் கற்பால் ஆகாத காரியங்களு முளவோ என்பதற்கு உதாரணமாக கற்பிற் சிறந்தவளாகிய அனுசூயை அம்மையாரை எடுத்துக் கொளவோம். இவளது கற்பின் மகிமைதான் என்னே! இவள் முதலில் தன்னுடைய கற்பின் மஹத்துவத்தால் தன் கற்பைச் சோதிக்க வந்த மும்மூர்த்திகளையுந் தான் இன்னாரென தெள்ளிதின் உணர்ந்து பின மும்மூர்த்திகள் தன்னை நிர்வாணமாக படைப்புவிக்க கட்டாயப் படுத்தும்பொழுது அவர்களை தன் கற்பின் மகிமையால் சிறு குழந்தைகளாக மாறும்படியும் செய்தாள் பின் எல்லோராலும் போற்றப்படுவளாகிய லக்ஷ்மி, சரஸ்வதி சக்தி ஆகிய மூன்று தெய்வமாதர்களும் அவளது காலில் விழும்படி செய்து பின் அவளிடம் மாங்கல்ய பிட்சை கேட்கும்படி செய்தது இவளது கற்பின் சாமர்த்தியமே. ஆகவே கற்பினல் ஆகாதது வேறொன்றுமில்லை என்பது தெள்ளிதாய் விளங்கலாயிற்று.

ஸ்திரீகள் கணவனுக்குச் செய்யும் பூஜையே கடவுளுக்குச்செய்யும் பூஜையைவிட மேலானதாகும். மங்கைக்குக் கணவனே முத்தியளிக்கும் நாதன். கணவன்சொல் பிசகாமல் நடக்கிறவளே மோக்ஷமடைபவள். பெண்களுக்குரிய தருமங்கள் எல்லாவற்றுள்ளும் முக்கிய தர்மம் பதிவிரதம். பதிவிரதை தன்வீட்டுக்கு வரும் துறவிகள் முதலிய பெரியோர்களையும் அதிதிகளையும் உபசரித்து அவர்களுக்கு அன்னங்கொடுத்து உதவுதல் வேண்டும். யாவரேனும் இடியிடித்ததுபோல உரத்த சத்தத்தோடு பேசலாகாது. இனிய குரலோடு மிருதுவாகப்பேசல் வேண்டும். கொண்ட கணவனைத் தெய்வமாகப் பாவித்து அவன்சொல் தடுக்காமல், அவனுக்குக்கீழ்ப்படிந்து, பொய் பேசாமல் அவன் கருத்தின்படி ஒழுகவேண்டும். கொண்டகணவன் குருபியாயிருந்தாலும் அவனை மன்மதனென்று நினைக்கவேண்டும்.

கற்புடைய ஸ்திரீகள் நாயகனுடைய ஆயுள்பெருகும்பொருட்டு மஞ்சலணிதல் வேண்டும். தன் நாயகன் பெயரைச்சொல்லலாகாது.

அவன் இருக்காலன்றி அவனெதிரேதான் இருக்கலாகாது நாயகன் ஏவு முன்னமே அவன் குறிப்பறிந்து நடக்தல் வேண்டும் தன் நாயகன் வீட்டுக்கு வரும்பொழுது அவனை முகமலர்ச்சியோடு எதிர் கொண்டு கைகால் கழுவ ஜலங்கொடுத்து உபசரித்தல் வேண்டும்

"அன்னை தயையும் அடியாள் பணியும மலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசிதுயிலும் விறன் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

என்றபடியே மனைவியானவள் கணவனுக்குத் தாதிபோலப் பாதபணி விடை செய்பவளாயும், அரசனுக்கு மந்திரிபோல் சமயோசிதம் அறிந்து நல்ல ஆலோசனை சொல்பவளாயும் ஸ்ரீ மகா லக்ஷ்மியைப் போலப் பெண்ணைப் பெண்கண்டு மயங்கக்கூடிய அழகுள்ளவளாயும் பூமாதேவி போல எப்பொழுதும் பொறுமையுள்ளவளாயும், வேசை போலத் தன் பர்த்தாவை சந்தோஷப்படுத்துபவளாயும்.

"குலமகட்கழகு கொழுநனைபேணுதல்" என்றபடி பர்த்தாவை அன்புள்ள தாயைப்போல அறுசுவை யுண்டிகளாலும் உண்பித்துச் சந்தோஷப்படுத்துவளாயும் இருத்தல் வேண்டும்.

ஒருபோதும் கணவன் அநீதியாக கோபித்துக் கண்டித்தாலும் தானும் கோபித்து எதிர்வார்த்தை பேசாது மௌனமாயிருந்து இதமே பேசி அக்கோபத்தை ஆற்றல் வேண்டும்.

"பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருந்தல்" என்று பெரியோர் விதித்திருக்கின்றனர்.

இன்னும் மனைவியானவள் தன் கணவனுடைய குற்றங்களைப் பிறருக்குச் சொல்லலாகாது.

"தூற்றும் பெண்டீர் கூற்றெனத்தகும்" என்றார் ஔவையார். கணவனது துர்க்குணங்களைச் சொர்ப்பனத்திலும் நினைக்கலாகாது அவனுடைய நற்குண நற்செய்கைகளையே பாராட்டி அவனை மெய் யன்போடு உபசரித்தல் வேண்டும. பெண்கள் அச்சம், மடமை, நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களுடன் அமையவேண்டும். விவாகமில்லாமல் கன்னிகைகளாயிருக்கும் பருவத்தில் தாய்தந்தை யர் ஆதீனத்திலும், கணவனுக்குப் பிற்காலம் புத்திரர்களுடைய ஆதீனத்திலும் இருக்க வேண்டியதேயன்றிப் பெண்கள் ஒரு நாளும் சுயேச்சையாக இருக்கலாகாது.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

என்று சொல்லப்பட்டிருப்பதால் பெண்கள் தமது கற்பினால் காக்கும் காவல் காவலேயன்றி, அவர்களின் கணவர் சிறையினால் காக்கும் காவலால் என்ன பயன் ஒருபயனுமில்லை.

ஆகையால் நம் நாட்டு பாரத சகோதரிகளே! நீங்கள் தமயந்தியைப்போலவும், சீதாபிராட்டியைப் போலவும், கற்பரசிகளாய் விளங்கிக் கற்பென்னும் ஆபரணத்தை நழுவவிடாது பாரத மாதாவைக் கௌரவப்படுத்தி, பழைய பாரத நாடாக ஆக்கி, மேல்நாட்டு நாகரீகத்தினால் ஏற்பட்டிருக்கும்கெடுதலேயும் குறையையும் நிவர்த்தி செய்து வைப்பீர்களென்று நம்புகிறேன். கற்பரசிகள் நீடூழிவாழ்க. இறைவன் அருள்புரிவாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

K. சாமிநாதன்,
ரத்தின விலாசம், தெற்குத்தெரு, எட்டயபுரம்.

நம்நாட்டுப் பெண்மணிகள்.

உலகத்தில் வேறெந்த நாட்டு மாதர்களைக்காட்டிலும் நம்நாட்டு மாதர்களே கற்பிற் சிறந்தவர்களெனப் பெயரெடுத்திருக்கின்றனர். எனினும் இக்காலத்தில் அவர்களுடைய நிலைமையை நோக்கின் கேவலம் விலங்குகளினும் கேடான நிலைமையிலேயே இருக்கிறது. இதற்குக் காரணம், நம் பெண்மணிகளின் மேல்நாட்டு நாகரீக மயக்கமே. மேல்நாட்டு நாகரீகம் அந்நாட்டுக்கல்வியினின்றே வந்தது. ஆண்கள் மேல்நாட்டுப் படிப்பைப் படித்துக்கட்டினமுட்டை போதாதென்று பெண்களும் வாரிக்கட்ட எண்ணிவிட்டனர். அந்த நாகரீகப்பேயின் வசப்பட்டதால் பெண்களுக்குரிய அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு நற்குணங்களும் அறவே ஒழிந்துவருகிறது

சிலபெண்கள் சிறிதும் நாணமின்றி முழங்கால்வரை வெளியே தெரியும்படியான ஒருவித "கவுன்" என்னும் ஆடையை தரித்துக்கொண்டும் "பூட்ஸ்" தரித்துக்கொண்டும் இன்னும் ஏதேதோ விதமாகத் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர் மேல்நாட்டார் ஒரு நவர் கிரிச்சட்டியைத் தலையில்கவிழ்த்துக்கொண்டு சென்றாலும் அதைப்போல இவர்களும் செய்துக்கொள்ளப் பிரியப்படுவர் போலும்! அந்தோ! வெட்கக்கேடே! நாகரீகமே!

இன்னுஞ்சிலர் தங்கள் நாகரீகப்படிப்பின் காரணமாகத் தங்கள் கணவர்கள் எதிரே வருவதைக்கண்டும் எழுந்திராமல் உட்கார்ந்துக் கொண்டு ஆங்கில பத்திரிகையை வாசித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் கணவனை எள்ளளவும் மதிப்பதும் இல்லை. அவன் பேச்சையும் கேட்பதில்லை; அவனுக்கு அடங்கி நடப்பதுமில்லை. நம் நாட்டில் இப்பொழுது இத்தகைய மாதர்கள் இருப்பதனாலேயே இந்நாடு இவ்விதம் வளங்குன்றியும் அடிமையில் மூழ்கியும் இருக்கின்றது. முற்கால மாதர்கள் எதனால் கற்பரசிகளெனப்பெயரெடுத்தனர் என்று இத்தகையார் யோசிப்பதில்லை. யோசித்திருப்பின்,

முன்னைய மாதர்கள் தங்கள் கணவர்களைத்தெய்வமாகவணங்கி அவர்கள் சொல்தவறாமல் அவர்கள் விருப்பப்படி நடந்து பிற ஆடவரிடம் நேராக நின்றுகூடப் பேசாமல் அவ்வளவு கவனத்தோடு கற்பைக் காத்து வந்தனர்'' என்று தெற்றெனப் புலப்பட்டிருக்கும். கற்புள்ளவள் தன் கணவனைத் தெய்வமென்றே பாவித்து வணங்கி வந்தால் அவள் ஆலயங்களுக்குச்செல்ல வேண்டுவதில்லை. கற்புள்ள மங்கையர்கள் தேவர்களுக்குச் சமானமானவர்களென்றே சொல்ல வேண்டும். அவர்கள் கூறும் ஒவ்வொருவார்த்தையும் அவ்வப்பொழுதே பலித்துவிடும். இதற்கு உதாரணங்கள் எட்டுநாள் பொழுது புலராமல்செய்த மாதரும், வேடனைக் காட்டில் சாம்பலாக்கிய மாதரும் இன்னும் பலருமாவர். சாவித்திரியென்பவள் தனது கணவனின் உயிரை இயமனிடமிருந்து மீட்டுவரவில்லையா? கற்பரசிகளின் வழிவந்த இக்காலப் பெண்கள் இப்பொழுது கற்பைக் காக்க வேண்டுமென்ற எண்ணமே சிறிதுமில்லாமலிருக்கின்றனர். மற்றுஞ் சிலர் கணவர்களுக்குக் கீழ்ப்படியாதிருப்பதோடு வீட்டுக்காரியங்களையும் கவனியாது விலையுயர்ந்த நல்ல ஆபரணங்களை அணிவதே தங்களுக்குப் பரமார்த்த சுகமளிக்குமென எண்ணிமயங்குகின்றனர். ஒரு பெண் தனது கணவனுக்குக் கீழ்படிந்து நடந்து தனது கற்பைக் காத்து வந்தாளானால் அவளுக்கு வேறு ஆபரணங்கள் வேண்டுவதில்லை, எல்லா ஆபரணங்களும் தானே வந்துசேரும். இதை இவர்கள் அறிவதேயில்லை.

சிலபெண்மணிகள் கலாசாலையைவிட்டு நீங்கி வீட்டிலிருக்கும்பொழுது தாங்கள் வாசித்த புத்தகங்களை எப்படி இருக்கின்றனவென்றுகூட பார்ப்பதில்லை ஆர்மோனியம் முதலிய வாத்தியங்களின்மேலேயே கண்ணுயிருக்கின்றனர். சிலர் தங்களுக்குப் புத்தகங்கள் வாசிக்க நேரமில்லையென்று கூறுகின்றனர். இவர்கள் வீண் வேலைகளுக்காக எவ்வளவோ நேரங்களைக் கழிக்கிறார்கள் அந்த நேரங்களையெல்லாம் வாசித்தால் எவ்வளவோ வாசிக்கலாம்.

சிலர் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதில் மிக்க தவறாக நடந்துகொள்கின்றனர். குழந்தைகளின் மனம் மிக்க சுத்தமானது. அதனாலேயே "குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்தே'' என்றபடி குழந்தைகளைத் தெய்வங்களுக்கு நிகராகக்கூறப்பட்டிருக்கிறது. இளமையிலேயே அவர்களுக்கு நற்பழக்கங்களைப் பழக்கி வந்தால் அது அவர்களுடைய மனதில் நன்றாகப் பதிந்திருக்கும். "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்'' என்பது இதனாலேயே உண்டாயிருக்கிறது. அதனாலேயே பிள்ளைகளை இளமையிலேயே கல்விகற்கவிட வேண்டுமென்று முத்தோர்கள் கூறியிருக்கின்றனர் "இளமையிற்கல்'' என்பதனாலிதையறியலாம். பிள்ளைகள் கல்வி கற்றுவரும் பொழுது அவர்களுக்குத் தெய்வபக்தி புகட்டக்கூடிய நூல்களையும்

தேசசரித்திரம், சமயசித்தாந்தங்கள், தேசபக்தர்கள், கற்பரசிகள் சரித்திரங்கள் முதலான நல்ல நூல்களைப் படிக்கக் கொடுக்கவேண்டும். இவ்விதம் நம் நாட்டுப் பெண்மணிகள் ஒவ்வொரு நடத்தையிலும் ஒழுங்காய் நடந்துவந்தால் நம் நாடு சீக்கிரம் முன்னேற்றமடையும். இவ்விதம் நடப்பதற்குக் கடவுள் அருள்புரிவாராகவும்.

அ. ச. அருணாசல ரெட்டியார்.

முக்கியமான பழமொழிகள்.

1 இளமையில் கல்வி வாழ்வில் உயர்த்தும் கருவி

2 கைப்பொருள் போனாலும் கல்விப் பொருள் போகாது

3 கல்லார் உறவினும் கற்றோர் பகையே நலம்

4 கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன்

5 கல்விமான்களிடமிருந்து மூடர்கள் ஒன்றும் கற்கமாட்டார்கள் மூடர்களிடத்திலிருந்து கல்விமான்கள் அநேகம் கற்றுக்கொள்வார்கள்

6 தீப்புண் ஆறும் நோகவைத்த சொல் ஆறாது

7 காலம்போனாலும் வார்த்தை நிலைநிற்கும்

8 அநேக வருஷத்திய கௌரவம் அரை நிமிஷத்தில் அழிந்துவிடும்

9 உண்மை உலகத்தையாளும் பொய் பூவுலகில் பல்டியடிக்கும்

10 பகட்டான காசூபி படுமோசத்தை விளைவிக்கும்

11 பகலில் பக்கம்பார்த்துப் பேசு இரவில் அதுவும் பேசாதே

12 பகுத்தறியாமல் சொல்லாதே படபடப்பாகப் பேசாதே

13 எழு தலைமுறை தவறிவிட்டாலும் எட்டாவது தலைமுறையில் ஜயிப்பாயென் றெண்ணு.

14 மானுஷ்யம் இல்லாதவர் மாணிடப்பதர்

15 நன்மைசெய்வதிலேதான் நரர் பெறுமதி விளங்கும்

16 அலுவலை நீ நோக்கு ஆதாயத்தை தெய்வம் நோக்கும்

17 ஆதுலர்க்குக் கொடுத்தால் ஐஸ்வரியம் பெருகும்

18 சோம்பலின் நற்நந்தத்தைவிட சுறுசுறுப்பின் துற்கந்தமே நலம்.

19 நீ முயற்சியில் ஈடுபடு கடவுள் உனக்கு உதவி புரிவார்

20 தரித்திரத்தை யடையினும் தைரியத்தைக் கைவிடாதே

21 தாழ்வினிலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டும்

22 சுகம் வந்தால் மகிழ்வதும் துக்கம் வந்தால் விசனிப்பதும் கூடாது

23 நீ நன்மைக்குக்களிப்பும் தீமைக்கு வெறுப்பும் காட்டாதே

24 ஆயிரம் நல்லவார்த்தையைவிட நல்லோர்கள் முகதரிசனம் நன்மை செய்யும்.

25 நீ இருக்கும் ஸ்தலமே உனக்கு உலகம்

26 அற்பபுத்தியுடையவன் அனைவர்மீதும் ஐயமுறுவான்

27 சிநேகம் செய்யுமுன் ஆராய்ந்துசெய் பின் ஐயப்படாதே

28 உண்ணாமல் ஊரெங்கும் உலாவலாம் உடுக்காமல் வெளியிற் போகாதே.

29 எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டம் அதிகரிக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நன்மையும் நெருங்குகிறது.

30 மலையானது நிலை பெயர்ந்தது என்று சொன்னால் நம்பிக்கொள். மனிதன் குணமாறினான் என்று சொன்னால் நம்பாதே

31 சற்குருவின் தரிசனம் சகல பாபத்தையும் போக்கும்

32 சித்த சுத்தியுள்ளவனுக்கு தொட்டதெல்லாம் சித்தி

33 வேதத்திற்கு உலகம் பகை உலகத்திற்கு ஞானம் பகை

34 பொய்யான பொருளாசை மெய்யான அருளாசையை அகற்றும்.

35 ஞானம் இல்லாத மாந்தர் ஆவின் கன்றிலும் அதிகமல்ல

36 ஞாபகம் இல்லையென்று எவரும் சொல்லலாம். ஆனால் ஞானம் இல்லையென்று ஒருவரும் சொல்ல முடியாது.

K. R. கணபதி பிள்ளை,
சுண்டக்காமுத்தூர்.

இரஞ்சித ரத்னமாலா.

மலர் 7.

1. சில பேர்வழிகள் தமது ஆயுட் காலம் முழுவதும் பெரிய மனிதர்களுடன் பழகினாலும், லவலேசமாவது கௌரவமான குணங்களைக்கொள்ள அறியார்கள். கற்றோர்களை நீண்டகாலமாக சிநேகர்களாகப் பெற்றவர்களுங்கூட (சிலலோர்) நன்றாகப்பேசவோ அறிவை விருத்திசெய்யவோ வல்லவர்களாக ஆவதில்லை, இவர்களெல்லாம் மண்டூகங்கள். அகப்பை ஜாதி,

'தண்டா மரையி னுடன்பிறந்தே
தண்டே னுண்ணா மண்டூகம்' என்பது விவேக சிந்தாமணி.
அகப்பைக்குத் தெரியுமா அடியிற் சுவை ?

2, இக்காலத்தில் வரதக்ஷிணைக் கூலியினால் அவஸ்தைப்படுங் குடும்பங்கள் அநேகம். அதிலும் பிராம்மணர்கள் படும்பாடு இவ்வள வவ்வளவல்ல. ஆட்டுக்குட்டியை விற்பதுபோல் பிள்ளைகளை விற்றுப் பணம் சம்பாதிப்பவர்கள் பாக்கியசாலிகள்தான். ஆனால் பெண்களை யும் கொடுத்து கைக்கூலியும் கொடுக்கும் ஏழைகள் பாடு? இது இப்படியிருக்க முற்காலத்திலோ பெண்ணைக் கொடுத்தாலோ சீர் வகைகளுக்குக் குறைச்சலே யில்லை, பணம் முதற்கொண்டு ருது சாந்தி சீமந்தம் புண்ணியாவாசனம் ஆகியவைகளுக்கு முறையே சீர்கள் செய்யாவிடின் வந்துவிடும் கோபம். பெண்பெற்றாலே நடுங்கு வது இந்தப்பாழும் பணத்தினால்தான் அஞ்சு பெண் பெற்றால் அரச னும் ஆண்டிதான் என்று பழமொழிகூட ஏற்பட்டிருக்கிறது.

3, ஒருவர்மேல் தனக்கு வெறுப்பு ஏற்பட்ட ஒரு பத்திராசி ரியர் அவரைத்தமது பத்திரிகையில் கண்டித்து எழுதுவது போதா மல் எங்காயினும் ஒருவர் அன்னவரை தூஷித்திருப்பின் அதையும் தனது பத்திரிகையில் போட்டுவிடுகிறார். இது ஏனோ?

4. சில பொம்மை மனிதர்கள் நாலுபேர் அறிவாளிகள் கூடின சபையில் கௌரமாக வந்து உட்கார்ந்துகொண்டு மிகுந்த அறிவாளி போன்று எல்லாவற்றிற்கும் தலையை அசைத்து விடுகிறார்கள். அப் படி மௌனோபதேசம் செய்தாலும் அவர்களது வண்டவாளங்க ளெல்லாம் எப்படியும் வெளியில் வந்துவிடுகிறது, இதற்குத்தான் அபிநயம்.

5. குட்டி வேதாந்திகள் சிலர் சதா புஸ்தகமே அஸ்த பூஷண மாக வைத்துக்கொண்டு எந்தப்பேச்சு வந்தாலும் மஹா வேதாந்தி போல வேதாந்த வியாக்யானத்திற் புகுந்து கொள்வார்கள். இவர் கள் இத்துடன்நிற்காமல் உண்மை ஞானிகளைத் தூஷிக்க ஆரம்பிக்கி றார்கள் இவர்கள் வரட்டுக் கிணற்றுத்தவளைகள். இந்தப்புஸ்தகப் பூச்சிகள் பிதற்றுவது பிதற்றட்டும் என்றிருந்து விடுகிறார்கள் பெரி யோர்கள். இப்படியாயின், அவர்கள் எப்படி அடங்குவாகள்.

6. மதுரையில் சங்கப்பலகை இருந்ததாமே. இப்பொழுது இருக்கிறதா? என்றார் ஒருவர், அதற்கு ஆம் இப்பொழுதும் இருக் கிறது என்றார். அதைக்கேட்ட மற்றவர், எங்கே என்று முதலா மவர்கேட்க இரண்டாமவர், மதுரையில் பழைய சங்கப்பலகை இல்லை. ஆனால் ஊதச்சங்கு, தெளிக்க அப்பு, (தண்ணீர்) ஆடப் பேய், (அலகை) இம்மூன்றும் இருக்கின்றன என்றாராம். சங்கு— அப்பு—அலகை: சங்கப்பலகை.

7. தமிழின் மறுமலர்ச்சி தொடங்கும் இந்தப்புது சகாப்தத் திலே எங்கணும் பத்ரிகைகள் பரவினவண்ணமாகவே இருக்கிறது.

48

ஒவ்வொரு மாணவனும் பள்ளியை விட்ட உடனே ஒரு நூலுக்கு ஆசிரியனாய் விடுகிறது. அதிலும் நாவல் என்ற நவீனங்களை எழுது பவர்கள் அநேகர் இவைகளை எதை வாசிப்பது எதைத் தள்ளுவது எதை தள்ளுவதாயிருந்தாலும் சில்லோரைக் கட்டாயம் வாசிக்க வேண்டி நேருகிறது பாரதியார் நூல்களை வாசிக்காவிட்டால் மனம் வெடித்துப் போகிறது. ஞானரதம் என்ற கற்பனையை வாசித்தால் நாமும் பாரதியாருடன் சேர்ந்து கந்தர்வ லோகத்திற்குப் போய்விடு கிறோம் கண்ணன் பாட்டை விழுங்கினால் ஆநந்தம் ஒரு பக்கம் அன்பு ஒரு பக்கம் பொத்துக்கொள்கிறது 'சுதந்திரதாகம்' 'சுதந் திரப்பள்ளு' 'செந்தமிழ்நாடு' ஆகியதேசீய கீதங்களை வாசித்தாலோ பாடினாலோ, ஆவேசம் கிளம்பிவிடுகிறது. எல்லா உணர்ச்சியையும் அடக்கி ஜீர்ணம் செய்துவிட்டு இருந்தால் 'ஆஹா! இத்தகைய தொரு கவிமணியின் அரிய பிரபையை சிறு நாட்களிலே இழந்து விட்ட தமிழ்நாட்டினது துரதிர்ஷ்டம் தான் என்னே' என்று அழு கை வந்துவிடுகிறது. சி வா. ஜெகந்நாதன்,

மோகனூர்.

மானிட அவஸ்தை.

'அரிது அரிது மானிடராதலரிது' என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் இம்மானிட ஜென்மம் எடுத்து கர்ப்ப வாஸம் முதல் மரணம் வரையுள்ள அவஸ்தைகளைக் கவனித்தால் இஜ்ஜென்மம் எடுப்பதிலும் எடுக்காம லிருப்பதே மேல் என்று தோன்றுகிறது. அவ்வவஸ்தைகளாவது:—

சிசு அவஸ்தை.

"தாயுதரக் கருப்பை மெய்யுறுத்த லொன்று தண்ணு
 தகமுண் ணிறைவ தொன்று வெய்ய
தீயினிடை வெப்பமொடு வேத லொன்று திகழ்சூத
 வாயு வினிற் றள்ள லொன்று
மாயமிகு யோனிவழி நெருங்கப்பட்டு மண்ணின் மிசை
 மெய்வருந்தி விழுவ தொன்று
ஆயமிகு வருத்தமொடு ஜெனிப்ப துள்ளில் வந்து
 கொடுந்துன்பம் வநதடையு மைந்தா" (இகபோகசாரம்)

"அஞ்ஞான விருண்மேவு மாத்மபய முண்டாகுந்
 தஞ்ஞான வழுகையது காருமே-அஞ்ஞான
 பாபரப்புச் செய்கை பற்றுமிக் குழவிகட்
 குரியநாற் செய்கையென வோது"

பால்யாவஸ்தை.

" துண்டத் தனம்பீதி தோன்ருமை யுண்டிதனிற
கொண்டம் துண்கவலே கொள்ளுமே—தொண்டுபணி
புரிகின்ற வைந்தாகப் புண்பாலர் தம்புத்தி
விரிகின்ற தந்தோ விதி" (அநுபோகசாரம்.)

யௌவன அவஸ்தை

" காமவெந் தீயில் வேதல் கன்னியர் மீதி லாசை
யேமமுந் துயில்வ தின்றி யிச்சையை நுகரும்நோக்கம்
தாமத மற்ற செய்கை யானவத் தவறு மேவுங்
காம யௌவனத்தின் தன்மை காணுதி பழிப்பி லாதாய்"

கௌமார அவஸ்தை.

" தான்கொண்ட் தோர்குடும்ப மிசைதனிகொண்ட தோர்விதனம்
மான்கொண்ட தோர்விழியா ளோடு மகவும் பிறவினரும்
வான்கொண்ட தோர்வழி யேபெற வுழலும் மயமயமாய்
ஊன்கொண்ட தோர்உறமேவ குறுதுன்பம் மிவைகுமரா"

விருத்தாப்பிய அவஸ்தை.

" பலமது குறைதலாகம் பழுத்திடல் நடுக்கம் ஐந்து
புலன்களு மகிமைபற்றுப் போவது மல்லாற்பெற்ற
நிலைமையி னிற்றல் மூன்றும் நீர்பதந் தன்னைக்கொள்ளல்
இலகுறும் புந்தி மாழ்க லாகவே மூடைபார் மூப்போர்"
(அநுபவசாரம்)

மரணவஸ்தையைப்பற்றி ஈண்டெழுதவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் மற்ற எல்லா அவஸ்தைகளையும்விட மரணவஸ்தை மிகவும் கொடியது.

தவிர இவ்வவஸ்தைகளைச் சகித்தும் இம்மானிட ஜென்மம்:—

" மின்போ லழியும் வயிற்றுமை வடிவாயழியும் மெய்புருவாய்
முன்போ யழியும் பிறந்தழியும் மடவாருடனே முயங்கிபதன்
பின்போ யழியும் நரைத்தழியும் பேய்போற்றிரிந்து பெயர்ந்தழியும்
பொன்போல் வளர்த்து மிவ்வுடலம் நிலையாதழிந்து போய்விடுமே"
(பேரூர் புராணம்.)

ஆகலால் இக்கஷ்டங்க ளெல்லாம்பட்டு மானிட ஜென்மம் எடுத்து அது போய் விடுவதற்கு முன்னே 'தெரிவோனைத்தெரி' என்பதற்கிணங்கி எப்பாடுபட்டோ நாம் இனிமேலாவது இஜ்ஜென்மங்களும் கர்ப்பவாஸமும் வேண்டாமென்று நற்காரியங்களைச் செய்து ஈசுரபக்தி செய்து ஈசுவர சாம்ராஜ்யத்தை அடையவழி பார்க்க முயலவேண்டும். ஹிதோபதேசி.

பெருமை.

சீர்பெருங் காசினி சேருயிர் பலவும்
ஏர்பெற நின்று எண்ணிப் பார்க்கில்,
ஒவ்வொன் றுந்தன் உடன்பாட் டையே
செவ்வை யாச்சொலும் சிறப்பு வாய்ந்துள.
அதுதான் யாதென அறையக் கேண்மோ,
குதுகுலத் துடனே கூசா(து) "யானே
செல்வன் பலவான் சீர்மிகு கவிஞன்
நல்லன் பெரியன் நயமிகும் அழகன்
சொல்லும் பொருளும் சேர்க்கும் என்னிடம்
அல்லால் யாரிடம் அமைந்துள சொல்லீர்;
ஜாதியிற் பெரியன் சரியையிற் பெரியன்
கியாதியிற் பெரியன் கிரியையிற் பெரியன்
யோக மதனிலும் ஓதும் ஞான
பாக மதனிலும் பார்க்கி லெனைப்போல்
யார்வல்லார் சொல்லும் அவனியில்," என்றே
மார்பு தட்டி மதியா திருக்கும்.
என்னே! இம்மதி ஏச்சுக் கிடமென
வின்னோர் நுதலார் விளம்பா திருக்க
அன்னார் பாங்கர் அறியக் கேட்டதில்
சொனனர் ஒன்றைச் சுருக்கமாக.
அப்பொருள் யோனீ யாகை யாலே
இப்பொரு ளேபெரி தெண்ணிப் பாரீர்.
ஈசனும் மாலும் எண்ணில் பிரமரும்
வாசகங் கடந்த வன்றொண் டர்களும்
தேவரும் முனிவரும் திக்குளார் யாவரும்
பூவொடு பொருளும் பொருந்திய உடலும்
யாவையு நீத்தே அலைந்தார்; இதனுல்
பூவை மார்கள் பொற்றட மதுவே
பெருமை பேசும் பெரிய பாக்கிய
உரிமை பூண்டுள(து) ஓதுங் காலே. சுபம்.

S. ஆதிநாராயணன் பிள்ளை,
உபாத்தியாயர், ஆனைமலை.

பாணபுரத்து வீரன் 1 0 0
தேசிய சம்பந்தமான வீரரச மிகுந்த இனிய தமிழ்நாடகம்.
மதிமுகி சுவைததும்பிய துப்பறியும் தமிழ் நாவல். 0 8 0
இப்புத்தகக் கிரயத்தை முன்னதாக அனுப்புகிறவர்களுக்கு தபாற் கூலி இனம்.
விலாசம் :— வீ. ஆர். கேய்க்வார்,
2-15, பெருமாள் கோவில் தோட்டம் முதல் தெரு, சவுகார்பேட்டை, சென்னை.

ஓர் விஞ்ஞாபனம்.

நமது இரஞ்சிதனின் நேயர்களான எனது நண்பர்களை யானுகிய 72-ம் நெம்பர் சந்தாதாரன் அ. ராமச்சந்திரன் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால், முதலில் நம் இரஞ்சிதனை அற்பமாக நினைத்தேன். ஏனெனில், இரஞ்சிதன் முதல மதியில் 20-பக்கத்தோடும், இரண்டாவது மதியில் 24-பக்கத்தோடும் வெளிவந்தான். ஆனால் இப்பொழுதோ 40-பக்கமாக வருகின்றான். ஆகையால் என்னுடைய சிநேகிதர்களெல்லோரும் அவ்வவருடைய நண்பர்களை சந்தாதாரராக சேர்ப்பிப்பது மல்லாமல் தொடங்கும் வருடத்திலிருந்து நாம் எல்லோரும் நம்முடைய சந்தாவை இரண்டணாவாக உயர்த்தி அனுப்பினால் நலமாயிருக்குமென்று எண்ணுவதுடன் அனுப்புமாறும் கோருகிறேன். நாம் எல்லோரும் இவ்வருடம் முடிவதற்குள் இரண்டணா ஸ்டாம்பை (Stamp) கவரில் வைத்து அனுப்பிவிட்டால் பத்திரிகாசிரியர் அதற்காக நம்மெல்லோர்க்கும் இவ்வருடத்திய இரஞ்சித போதினியின் இதழ்களைப் பைண்டு செய்துகொள்வதற்குவேண்டிய விஷயங்களையெல்லாம் அச்சடித்து அனுப்புவாரென்று என்னுடைய தாழ்மையான வந்தனத்தையளிக்கிறேன். எல்லா நண்பர்களும் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஸ்டாம்புகளையும் அனுப்புகிறேன். ஆகையால் தயவுசெய்து எல்லாரும் அனுப்புவீர்களென்று நான் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

அ. ராமசந்திர நாயுடு,

சின்னவரிக்கம், ஆம்பூர் போஸ்டு.

பத்திராதிபரின் அறிக்கை.

நம் இரஞ்சிதனை கடந்த ஆண்டிலிருந்து ஆரம்பித்து இற்றைக்கு இரண்டு ஆண்டுகளாகியும் நண்பர்கள் பலர் தமிழ்க்கல்வியின்மேல் ஊக்கமின்றி உறங்கியிருப்பதனால் அன்னோர்களுக்கு இரஞ்சிதனால் போதிக்கவே நாம் இரஞ்சிதனை ஆரம்பித்து குறைந்த சந்தாவாகிய அணா 14ஐ. ஏற்படுத்தினோம். இப்பத்திரிகையை ஆரம்பித்து இதனால் பெரும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்பது நம்முடையவும் ஆசிரியருடையவும் எண்ணமலல. இரஞ்சிதனைப் பல நண்பர்களும் வாங்கி வாசித்து அதிலுள்ள விஷயங்களைக் கிரஹித்து நன்னெறி கைக்கொள்ளவே சந்தாவை நாம் ஏற்படுத்தி யிருக்கிறோம். ஆகையினால் நமது சந்தாநேயர்கள் ஒவ்வொருவரும் இரண்டுமூன்று புதிய சந்தாதாரர்களைசேர்த்து இரஞ்சிதனை ஆதரிக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றனம். இங்ஙனம்:

பத்திராதிபர்.

" நீதிவிஜயம் "

முன் தொண்டை மண்டலத்தில் பகவானென்னும் அந்தணர் கண்டோர் புகழக்கேட்டோர்மகிழக் கல்விக்கொழுந்தாய் விளங்குங் கால் விராலிமலையில் தவமுனி என்பவர் கடற்பிறந்தாளென்னும் அருள்மங்கையாம் பார்ப்பனப் பேதையை மணந்து ஒரு தையலைப் பெற்றார் தவமுனி தம் குழந்தையை உறையூர்ப் பெரும்பறையன் என்போன் எடுத்துக்கொண்டு போய் வளர்த்து வருகையில் ஒரு கால் மண்மாரி பெய்து இக்குழவி நீங்கலாக மற்றோர் மாண்டுபோயி னர். ஆகவே குழவி பற்றினரின்றி அடுத்த மேலூர் சேரியில் நீதி ஐயன் குடிலில் ஏமமுற்று உய்ந்து வந்தனள், பகவன் காசியாத் திரை நிமித்தமாய் மேலூரையடுத்த ஒரு சத்திரத்திற்றங்கி சமயல் செய்துகொண்டிருக்கையில் அச்சமயம் அங்கு நம்மங்கை நாடக் கண்ட பார்ப்பனன், நீயார்? புலைச்சியோ, வலைச்சியோ, இங்குற் றனை என்று முனிந்து கடிந்து தன்கையிலிருந்த சட்டுவத்தால் ரத்தஞ்சோர சென்னியில் அடித்து விரட்டினன் பிறகு பகவன் காசியாத்திரை செய்து திரும்புங்கால் மீண்டும் அச்சத்திரத்திலேயே வந்திறங்கினன், அங்கு மீண்டும் நம் கன்னிகை ஆடையாபரண அலங்காரியாய் வந்து தோன்றினள். நீதி ஐயனும் அவன் வந்து அவளை மணக்குமாறு பகவனை வேண்டினன். அங்ஙனமே மணமும் நிறைவேறிற்று, மணந்த சின்னாட்கெல்லாம் அம்மங்கையின்மண்டை யில் தான் முன்பு அடித்த அதியின் வடுவைக்கண்டு 'ஆதியன்றோ' என்று பிரமிப்புடன் வினவி அங்கிருந்தற் கேலாமல் ஓடலாயினன் ஆகவே அவளுக்கு ஆதியென்று காரணப்பெயர் வழங்கும். 'புகன் றிடு நன்மை தீமை பொருந்துத லூழ்வினையாம்' என்பதை ஓர்ந்த ஆதி அவரைத்தொடர்ந்து, நீங்கிடின் அவமே உயிர்தரியேன் என்று இரங்கலும், அவர்களுக்கு மக்கள் எங்கு பிறக்கின்றார்களோ ஆங்கே மறுகொடியில் அவற்றினை விட்டுவிட்டு அப்பால் நீங்கவென்று ஏற் பாட்டுடன் செல்லுகையில் அவர்களுக்கு திருவள்ளுவர்.

ஔவை, உப்பை, உறுவை, அதிகமான், வள்ளியம்மை என ஆறு குழவிகள் பிறந்து அவ்வவ்விடங்களில் விடப்பட்டனர். அவ் வாறு விட்டேகுங்கால் தெய்வப்புலமை வாய்ந்த நம் ஔவையார்:—

"இட்டமுட னென்றலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டனோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக் கன்னப்!
நெஞ்சமே யஞ்சாதே நீ" என்று தேற்றினாராம்.

நிற்க, பிறக்கும்போதே! இவ்வளவு ஞானவறிவை யுடைய நம் பாட்டியார் நமக்கு கணக்கில்லாத நீதிகளை புறக்கணிப்பது நன்றா குமா? இப்போது அந்நீதிகளில் சிலவற்றை இங்கு விவரிக்கப் புகு வோம்.

1 " அறஞ்செய விரும்பு "

அறம் - தருமம், செய-செய்ய, விரும்பு - ஆசைப்படு,-தருமம் செய்ய ஆசைப்படு.

∴ தருமம் என்பது என்ன ? ஈதல் அறம். கொடுத்தலே தருமமாகும். சதுர்வித புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினுள் பின் மூன்றிற்கும் ஊன்றுகோலாகவும் ஆதாரமாகவும் உள்ளது அறமேயாம். அதாவது அறம் என்பதால் பொருள் இன்பம், வீடு என்ற மூன்றும் தானாக வந்து சேரும். ஒருவன் தர்மம் செய்தானாயின் 'கொடுத்தபொருள் வளரும்-கொடாப்பொருள் குறையும்' என்ற பழமொழிப்படி பொருள் ஜாஸ்தியாகும், அதனால் மனதுக்கு ஒருவித சந்துஷ்டி ஏற்படும். தானதர்மங்கள் செய்பவனுக்கு கேர்பம் முதலானவைகள் உண்டாகாது. அதனால் அவன் யாதொரு தீச்செயல்களையும் செய்யமாட்டான். எதையும் ஈசுரார்ப்பணம் என்று தானம் செய்து வந்தால் மோக்ஷ சாம்பிராஜ்யமும் கிட்டும். தவிர அறம் என்பது மனுதர்ம சாஸ்திரத்தில், செய் என்பவைகளைச் செய்வதும் விலக்கியவைகளை செய்யாது விடுதலுமே. அதாவது ஜாதி தர்மமும் ஸ்வதர்மமுமே அறம் என்பதாயிற்று. மற்றும் அறம் என்பது இல்லறம் துறவறம் என்பதாகி முடிவில் கொடுப்பதே அறம் என்பதாயிற்று.

தவிர நம்மம்மையார் :—

" சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதோ ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி"

என்று கூறியிருக்கின்றதையும், படிக்காசுப் புலவரியற்றிய பழமொழி விளக்கத்திலும்:—

" தன்மமது செயல்வேண்டும் தண்டலைநீள்
நெறியாரே தயவு செய்வார்
வன்மவினை செயல்வேண்டாம் பொய்வேண்டாம்
பிறரை யொன்றும் வருத்தல் வேண்டாம்
கன்மநெறி வரல்வேண்டாம் வேண்டுவது
பலர்க்கு முபகார மாகும்
நன்மை செய்தார் நலம்பெறுவர் தீமை
செய்தார் தீமை பெற்று நலிவர்தானே "

" திருவிருந்த தண்டலையார் வளநாட்டி லில்வாழ்க்கை
செலுத்து நல்லோர்

ஒருவிருந் தாகிலு மின்றி யுண்டபகல்
பகலாமோ வுறவாய் வந்த
பெருவிருந்துக் குபசாரம் செய்தனுப்பி
இன்னமெங்கே பெரியா ரென்று
வருவிருந்தோ ருண்பதல்லால் விருந்தில்லை
துண்ணுஞ் சோறு மருந்து தானே"

என்று கூறியுள்ளதையும் விவரித்து நோக்கின் தருமம் செய்வதின் அருமை தெரியும்.

இம்மஹா மேன்மை பொருந்திய அறவினையைச் செய்யாமல், பணம் பணம் என்று அலையும் பேய்களுக்கு முடிவில் மீளா நரகமே கிட்டும் எனபதில் ஆக்ஷேபனை யுண்டோ!

'நிறை செல்வம் நீரிற் சுருட்டு நெடுந் திரைகள்' என்றில்லாமலும்,

"பிறக்கும் போதொரு பொருளுங் கொடுவந்த
தில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் போதிலுங் கொண்டு போவதில்லை
யென்றும் சும்மா விருந்து வீணே
சிறக்குந் தரயினு மருள்வார் தண்டலையிற்
சேராமற் றேச மெல்லாம்
பறக்குங் காகம திரக்கும் கொம்பறியா
தெனத்திரிந்து பயன் பெறுரே"

என்றபடி வீணே தர்மசிந்தனையே இல்லாமல் அலைவதால் யாது பயன்? தவிர நம்பாட்டியாரும் 'அறனை மறவேல்' தர்மத்தை மறக்காதே என்றும் கூறியிருக்கின்றனர்.

தர்மம் செய்வதிலும் ஒருவர் நம்மையண்டி யாசித்தாலன்றி, என்றிருத்தல் கூடாது.

நாமே வலியசென்று உதவல் வேண்டும். பொருளால் உதவ இயலாவிடினும் தேகத்தாலும் இன்சொல்லாலும் உதவவேண்டும். உத்தமர்கள் எப்போதும் தம்முடைய உதவியை யார் நாடுகிறார்கள் என்றவண்ணம் எதிர்ப்பார்த்து நிற்பார்கள்.

"சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு"

தர்மம் செல்வத்தையும் மோக்ஷத்தையும் அளிக்கும் மானிடருபிர்க்கு ,தர்மத்தைவிட மேலான செல்வத்தை யளிக்கவல்லது வேறெதுவுமில்லை என்பது இதன் பொருள்.

நன்மனதுடன் தருமம் செய்யவேண்டுமேயன்றி பிரதிப் பிரயோஜனத்தைக் கருதக்கூடாது. சிலர் பெருமைக்காக தருமம் செய்கிறார்கள். அப்படிச்செய்வதால் யாதொருபயனும் இல்லை. இதை விளக்க ஓர் சிறிய கதை கூறுவாம் :—

'முன்பு ஒரு அரசன் ஒரு கோயில்கட்ட உத்தேசித்து அதற்காக இதர ஜனங்கள் யாதொன்றும் உதவக்கூடாது என்றும் தான் ஸ்வயமாகவே சிலவழித்து கோயிலைக்கட்டி தன் கீர்த்தியைப் பிறர் மெச்ச நிலைநாட்டவேண்டுமென்று எண்ணி அப்படி பிறர் யாதாயினுமொரு பொருள் உதவி செய்ய முன்வருவார்களாகில் அவர்களுக்குக் கொடுந்தண்டனை விதிப்பதாகப் பறைசாற்றுவித்தான். அந்தப்படி கோயிலும் கட்டி கும்பாபிஷேகம் முதலானவைகள் கம்பீரமாக நடந்தேறியது. கடைசியில் அரசன் அக்கோயிலின் வாசலில் ஒரு 'சலவைக்கல்'லில் தன்பெயரை தங்க எழுத்துக்களால் பதிப்பித்து நாட்டினன். அன்றிரவு அவ்வரசன் நித்திரையில் கோயில் வாசலில்கட்ட சலவைக் கல்லிலுள்ள தன் பெயரை அழித்துவிட்டு அவ்வூரிலுள்ள ஒரு விதவையின் பெயரை யாரோ பதிப்பித்தது போல் சொர்ப்பனங்கண்டு மறுநாள் காலை அந்த ஸ்திரீயை வரவழைத்து விசாரித்தான். அந்த ஸ்திரீ மிகவும் பயந்து, ஒரு நாள் கோவிலுக்காகக்கல் இழுத்துக்கொண்டு தன்வாசல் வழியாய் மிகக் களைத்துப்போகும் காளைக்குத்தான் ஒரு பிடிவைக்கோல் கொடுத்ததாயும் வேறுதான் ஒன்றும் செய்யவில்லை யென்றும் உண்மையை உரைத்தாள் உடனே அரசனுக்குப் புத்தி வந்துவிட்டது. நேயர்காள்! என்ன ஆச்சரியம்! ஒரு ஸ்திரீ ஒருபிடி வைக்கோல் கொடுத்ததினால் அரசன் சிலவழித்தது அவ்வளவையும்விட மேல் தூக்கி விட்டதைப் பார்த்தீர்களா! ஆதலால் யாரும் அந்தரங்கப் பிரீதியாய் எந்தக்காரியத்தையும் செய்யவேண்டும். சிலர் யாரேனும் தம்மை யாசகம் கேட்டால் அவர்களை உனக்கு வேறு வேலை யில்லையோ போ போ, என்று நாய்போல் சீறி விரட்டிவிடுகிறார்கள். இது மிகவும் கெட்ட பழக்கம். இதை அறவே ஒழிக்கவேண்டும்.

எல்லா தானங்களிலும் அன்னதானமே சிறந்தது. இதற்கு 'வருவிருந்தோம்பல்' என்ற கொள்கையே தொழிலாகக்கொண்ட இளையான்குடிமாறனார் சரித்திரமே இலக்காகும்.

தவிர தருமத்தைப் பிறகு செய்வோம் என்றிருத்தல் பெரும்பிழை. "இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக, வன்சொற் களைகட்டு வாய்மை-பொருவட்டி, அன்பு நீர்பாய்ச்சி யறக்கதி ரீனவோர் பைங்கூழ் சிறுகாலை செய்"

என்ற உபதேசப்படி தருமத்தை சிறுவயதில் தொடங்கி சிறுகச்சிறுக செய்து நல்ல மார்க்கத்தையடைய முயலவேண்டும். (தொடரும்),

'தர்மமே ஜய'. தண்—மிழ்த் தொண்டன், உடையாளூர்.

பெற்ருேர் பக்தி.

நாம் தாய் தந்தையர்களிடத்தில் பாராட்டும் அன்பே பக்தி எனப்படும். பெற்ருேர்களுடைய சொல்லைத்தட்டாமல் நடக்கவேண்டும். அவர்களுக்கு வருத்தம் வராதபடியும் கஷ்டத்திற்குட்படாதபடியும் நடக்கவேண்டும். அவர்களிடத்தில் ஏன் பக்தி செலுத்தவேண்டுமெனில், அவர்கள் புத் என்னும் நரகத்திலிருந்து மீள்வதற்காக புத்திரனைப் பெறுகிருர்கள்.

நாம் சிறுவர்களா யிருக்கும்போது நம்மை அவர்கள் அவர்களுடைய கண்கள்போல பாதுகார்க்கிருர்கள். மற்றும் பாலூட்டியும் உணவை உண்பித்தும் நமக்கு வியாதி வருமற்படிக்கு தாயானவள் பத்தியமிருக்கிருள் ஆகையால் நாம் அவர்கள்கேட்டவற்றைகொடுத்து அந்தியத்தில் அவர்களுக் கீழ்படிந்து சிச்ருஷைசெய்ய வேண்டும். நம்மை அவர்கள் பெற்றதற்கு நாம் அவர்களை நரகத்திலிருந்து மீட்பதற்கும் ஏனெனில் புத்திரனில்லாதவனுக்கு மோக்ஷமில்லை. நாம் அவர்களுக்கு கீர்த்தி கொண்டுவரவேண்டும். அப்படிக்கின்றி ஒருவனுக்கு மனைவி வந்தவிட்டால் அவளைவீட்டில் உட்காரவைத்துவிட்டு தாயை வீட்டுவேலைகளைச்செய்ய நியமிக்கிருர்கள் அவள் தன்னுடய மாமியின் பேரில் ஏதாவது குற்றத்தைத் தன்னுடைய மனைவியே தெய்வமென் றெண்ணியிருக்கும் அவன் தாயை அடிப்பதும் திட்டுவதும் கிழவியா யிருந்தாலும் அவளை அநேக வேலைகளைச் சொல்லிக் கஷ்டத்திற் குட்படுத்துகிருர்கள். ஆனல் அப்படி நடப்பிப்பது அதிக பாபமான காரியம்.

உதாரணமாக:—

எண்டிசையுங் கொண்டாடும் பண்டரிபுரத்தில் புண்டரீகனென்னும் பிராமணன் இருந்தான். அவன் பாலிய முதல் வேசியா நேசனுக இருந்தான். அவன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் செலவழித்து வந்தான். அவனுக்கு கலியாணம் செய்ததில் தன்னுடைய தாயையும் தகப்பனையும் குரூரமாக நடத்தத்தலைப்பட்டான். அவர்கள் புண்டரீகனுடைய பாதைபொறுக்காமல் காசிக்குப்போகநினைத்து இரண்டு பேரும் கால்நடையாய் நடந்து போய்க்கொண்டிருக்க இதையறிந்த புண்டரீகன் தனக்கொரு குதிரையையும் தன்மனைவிக்கொரு குதிரையையுமாகக்கொண்டு வந்து அவைகளின்மேலேறி காசிக்குப் பிரயாணப்பட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். இவர்கள் நடுவழியில் குக்குடமுனி ஆச்ரமத்திற்குச்சென்று அங்கு அவரை காசி எவ்வளவு தூரமிருக்கிறதென்று கேட்க அவர் தனக்கு தெரியாதென புண்டரீகன் காசி எவ்வளவு தூரமிருக்கிறது என்று தெரியாத மனிதன் ஒருமனிதனு என்று அவரை ஏளனஞ்செய்தான். அவ்வழியில் மூன்று கோர ரூபமுடைய ஸ்திரீகள் உட்சென்று கொஞ்ச

நேரத்திற்கெல்லாம் மறுபடியும் அழகிய ரூபத்துடன் வரக்கண்ட புண்டரீகன் அவர்களுடைய சமாச்சாரத்தைக் கேட்க அவர்கள் இவன் துஷ்டனென்று திட்டிப்பாகத் தலைப்பட்டார்கள். அவன் போய் மறுத்து கெஞ்சிக்கேட்க அவர்கள் தாம் கங்கா, சரஸ்வதி, யமுனா என்றும் தங்களிடத்தில் மூழ்கும் மனிதர்களுடைய பாவங்கள் தங்களைச் சார்கிறதென்றும் அவைகளை நிவர்த்திக்கொள்வதற்கு மாதா பிதா சிச்ருஷைச்செய்யும் அம்முனீசுவரனின் ஆசிரமத்தைப் பெருக்கிக் கோலமிட்டுத் தங்களுடைய பாபங்களைப்போக்கிக்கொண்டு போகிறோமென்றும் சொல்லி அவனையும் மாதா பிதா சிச்ருஷை செய்யச்சொல்லிப் போய்விட்டார்கள். இவன் முதலில் முனியை ஏளனம்பண்ணினவன் அவருடைய பிரபாவத்தைக்கேட்டு அவரிடம்போய் அவரிடத்தில் உபதேசம்பெற்று தாய்தந்தையர்களை தங்கள் குதிரைகளின் மேலேற்றிக்கொண்டுவந்து வீட்டில் சிச்ருஷை செய்துவந்தான். கடைசியில் அவனுடைய பக்தியையறிந்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பிரத்தியக்ஷமாகி வரம் கொடுப்பதாகச்சொல்ல புண்டரீகன் சுவாமியைத் தன்னுடைய பேருக்காக புண்டரீகபுரமென்னும் திவ்விய ஸ்தலமொன்றை யுண்டாக்கவேண்டு மென்றும் அவ்விடத்தில் வந்து அவரை சேவிப்பவருடைய பாவங்களை நிவர்த்திக்க வேண்டுமாகக் கேட்டுக்கொள்ள ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அப்புண்டரீகனுடைய பேரால் பாண்டுரங்கனென்ற அவதாரத்துடன் அந்த ஸ்தலத்திற்கு பண்டரீபுரமென்று நாமம் தந்து இப்பொழுதும் பிரசித்தியாக இருக்கிறது. அ. ராமச்சந்திர நாயுடு,

சின்னவரிச்கம், ஆம்பூர போஸ்டு.

அன்னதானம் II.

சென்ற புரட்டாசிமாத சஞ்சிகையில் அன்னதானத்தின் மகிமையைப்பற்றி சிறிது கூறினேன். இன்னும் சிலவற்றை விரித்துக்கூறுவதற்காக இவண் ஆரம்பிக்கலானேன். முன்னொருகாலத்தில் ஓர்ஏழை பிராமணன் பெண்சாதி பிள்ளைகளுடன் வசித்து வருங்காலத்தில் காலகதியால் பரமபதமடைந்தான். பின்னால் அவனுடையமனைவியும் பிள்ளைகளும் அன்ன ஆகாரத்திற்கு வழியின்றி பிச்சை எடுத்து உண்ண ஆரம்பித்தார்கள் இவளுடையமக்களில் ஒருவன் தாயை நோக்கிக் கூறலாயினன். அம்மா நாம பிச்சை எடுத்துக்கொண்டு வரும் அன்னத்தை நம்மிலும் வறியவர்களுக்கு ஏன் தானம் செய்கின்றாய்? இவ்வாறு தானம் செய்தால் நாம் எவ்வாறு ஜீவிப்போம் என்று கேட்கலாயினன். தாயானவள் சிறுவன் கேட்ட கேள்விகளுக்கு விடைபகரலாயினள், அப்பா! அன்னதானத்தின் பலன் உனக்குத் தெரியவராது. ஆகையால் நீ வனத்திற்குச்சென்று ஜெக

நீசனைநோக்கி சில ஆண்டுகள் தவம்செய்வாயாகில் உன்னுடைய தவத்திற்குக் களிப்படைந்து பிரசன்னமாகி அன்னதானத்தினுடைய பலனை உனக்கு உரைத்தருளுவார் என்று சொல்லலாயினள். அவ்வாறே சிறுவன் தாயை கட்டமுது கட்டிக்கொடுக்கச்சொல்லி வாங்கிக்கொண்டு வனத்தை நோக்கித் தவம்செய்யப் புறப்பட்டு இரவும் பகலுமாக நடக்கலாயினன். 2. 3 தினங்களில் ஆகாரம் முடிந்துவிடவே சிறுவன் நடந்து களைப்படைந்து பசியும் தாகமும் உண்டாகி ஓர் மரத்தின் நிழலில் படுத்து நித்திரை செய்யலானான். ஆதவனும் தன்னுடைய இருப்பிடமாகிய மேற்றிசைக் கடலில்போய் ஒளிந்தான். அச்சமயத்தில் அவ்வழியாகச்சென்ற வேடுவனொருவன் விருக்ஷத்தினடியில் நித்திரை செய்யும் சிறுவனைத் தட்டி எழுப்பி கூறலாயினன். அப்பா நீ யார் எந்த ஊர், இப்பொழுது துஷ்ட மிருகங்கள் வெளிக்கிளம்பும் நேரமாயிற்றே அவைகள் உன்னைக்கண்டால் கொன்று தின்று விடுமே. என விளம்பினன். அப்பொழுது சிறுவன், தான் அன்னதானப் பலன் கேட்கப் போவதாகவும் வழியில் களைப்பு மேலிட்டு இந்த விருக்ஷத்தின்கீழ் நித்திரை செய்ததாகவும் கூறினன். வேடுவன் மனமிரக்கங்கொண்டு சிறுவனையும் தன்னுடைய குடிசைக்கு அழைத்துச் சென்றான். பின் இருவரும் போஜனம் சாப்பிடுகிறதற்கு எழுந்தார்கள். வேடன் தன் மனைவியை நோக்கி கூறலாயினன் இப்பொழுது நமக்கு தயாராகவிருக்கும் ஆகாரத்தை மூன்றுபாகமாகப்பிரித்து ஆளுக்கொருபாகம் சாப்பிடலாம் என்றுரைத்தனன். தன் புருஷன் கூறிய வார்த்தைகளைகேட்ட மனைவியானவள் அவ்வாறு மூன்றுபாகமாகப் பிரிக்கமாட்டேன். இரண்டு பாகமாகப்பிரித்து ஒருபாகத்தை நான் சாப்பிடுவேன். உனக்கு இஷ்டமாகயிருந்தால் உன்னுடைய பாகத்தை நீங்கள் இருவரும் சாப்பிடுங்கள் என்றுரைத்தாள். அவ்வாறே வேடுவன் தன் பாகத்தைப்பங்கிட்டு இருவரும் சாப்பிட்டுவிட்டு நித்திரைக்குச் சென்றார்கள். வேடுவன் சிறுவனை குடிசைக்குள் நித்திரை செய்யும்படியாக சொல்லிவிட்டு தான்வெளியிலுள்ள திண்ணையின் பேரில் படுத்து நித்திரை செய்யலாயினன். அப்பொழுது நடு ஜாமத்தில் அவ்வழியாகச்சென்ற புலியொன்று வேடுவனை தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தது. வேடுவன் கூச்சலிடவே குடிசைக்குள் நித்திரைசெய்த சிறுவன் வேடுவனை புலிதூக்கிக்கொண்டு ஓடுகின்றதைப் பார்த்து ஓடோடியும் சென்று முயற்சி செய்தும் புலி வேடுவனைக்கொன்று தின்றுவிட்டது. சிறுவன் குடிசைக்குச்சென்று வேடுவன் மனைவியிடத்தில் உள்ளவாறு சொல்லியருளினன். அவள் இவ்வார்த்தையைக்கேட்டவுடனே சிறுவனை அடாபாவி உன்னாலல்லவோ இவ்வாறு என் புருஷன் மடிந்தான் என்று தூஷித்து அடித்து விரட்டினள். சிறுவன் ஐயோ நமக்கு அன்னமளித்த அன்பனை புலிகொன்றுவிட்டதென வருந்தி காட்டைநோக்கிப் புறப்பட்டு, ஓர் நல்ல இடத்

தில் கைலேயங்கிரிவாசனை நோக்கித் தவமியற்றினன் பகவான் ஓர் சந்நியாசி வேடந்தரித்து பிராமணச்சிறுவனுக்கு காட்சியளித்தார் சிறுவனும் பகவானைக்கண்டு நமஸ்கரித்து அன்னதானப்பலனை உரைத்தருளும்படியாகக் கேட்டருளினன். பகவான் ஓர் எலுமிச்சங்கனியும் விபூதிப்பிரசாதமும் கொடுத்து இவற்றை சிறிதுதூரத்திலுள்ள அரசனிடத்தில் கொடுத்து அவனுடைய பத்தினியிடத்தில் கொடுக்கச்சொல்வாயாயின் பத்தாம் திங்களில் ஓர் ஆண்மகவுபிறக்கும். அக்குழந்தையை அன்னதானத்தின் பலனை கேட்பாயாகில் அதன் விருத்தாந்தங்களை விளம்பியருளும என்று சொல்லிவிட்டு மறைந்தருளினர். அவ்வரசன் பெயரும் ஊரும் தெரியாதபடியால் இங்கு எழுதவில்லை. அவ்வாறே பிராமணச்சிறுவன் எலுமிச்சங்கனியைக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு பத்தாம் மாதம் தான் வருவதாகச் சொல்லிவிட்டு சென்றான். அரசன் பத்தினியும் கர்ப்பமாகி, ஒன்பதாம் திங்கள் கடந்து பத்தாம் திங்களில் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

பிராமணச் சிறுவனும் சமசாரமறிந்து சென்று குழந்தையைப் பொற்றட்டில் வைத்து அன்னதான பலனைக் கேட்டருளினன். நண்பர்களே! பிறந்து சிறிது நேரத்தில் ஓர் குழந்தை பேச ஆரம்பித்தால் ஆச்சரியமல்லவா? அக்குழந்தையும் அந்தணச்சிறுவனே, நீ காட்டில் விருக்ஷத்தினடியில் படுத்து நித்திரைசெய்யும் பொழுது எழுப்பி குடிசைக்கு அழைத்துச்சென்று அன்னமளித்த வேடுவன் நானே! நான் புலியால், கொல்லப்பட்டு இறந்துவிட்ட பின்னல் உனக்கு அன்னமளித்ததின் பயனுக இப்பொழுது இராச வம்சத்தில்வந்து பிறந்திருக்கின்றேன். இவைகளே அன்னதானத்தின் பலனுகும். நிற்க உன்னை அடித்து அவமானஞ்செய்த என்மனைவியாகிய வேடுவச்சியும் இவ்வூரில் ஓர் வண்ணான் வீட்டில் கழுதையாகவும் நெற்றியின் நடுவில் ஓர் அடையாளம் வெள்ளையாகவும் கூடிப்பிறந்திருக்கிருள் என்று விளம்பி யருளியதைக்கேட்ட சபையிலுள்ளவர்கள்யாவரும் பரம ஆச்சரியமடைந்தனர். பின்னல் அவ்வரசன் அந்தணச் சிறுவனுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து அனுப்பிவிட்டான். சிறுவனும் அவ்வூரிலுள்ள வண்ணான்வீட்டிற்கு சென்று கழுதையைப் பார்த்து ஆச்சரியமடைந்து தன் சொந்த இருப்பிடத்திற்குச்சென்று சுகமே வாழ்ந்துவந்தான். ஸ்ரீமான்களே ஒருவேளை அன்னதானத்தின் மகிமையை நன்குணர்ந்து பசியென்று வருபவர்களுக்கு அன்னமளித்து புண்ணியத்தை யடைய முயலுங்கள். எத்தனையோ மனிதர்கள் அன்னம் போடுங்கள் பசிக்கிறது என்று வருபவர்களை அடித்துத் துரத்துகிருர்கள். இன்னும் மற்றொரு சமயங்களிலும் எழுதுவோம். வை. முத்தையா பிள்ளை.

தனிப்பாடல்கள்

ஏறக்குறையப் பத்தாண்டுகளின்முன் காலஞ்சென்ற ஆனைமலை வித்துவான் சிவசூரியம் பிள்ளையவர்கள் "பழனி முருகனையே பாடு" என்னும் ஈற்றடியைப் பூர்த்திசெய்யுமாறு என்னிடம் கூறினர். யான் அவ்வணணம் செய்த

நேரிசை வெண்பா.

* பூவ ரசுகருடன் பொற்பு மிகுமத்தி
மேவும் அவர்போற்றும் வேலனைத்—தாவும்
உழைபோல் விழிவள்ளி உத்தமியைச் சேர்ந்த
பழனி முருகனையே பாடு.

ஒருநாள் யானும் மேற்குறித்த சிவசூரியம் பிள்ளை அவர்களும் மற்றும் இருவரும் ஓர் ஒற்றைமாட்டுவண்டியிற் கண்ணுடிப்புத்தூருக்குப் புறப்பட்டோம். மாடு புதிதாகையாலும் இளவயதுடையதாகையாலும் வேகமாக நடக்கவில்லை. வழியோ தொலையவில்லை. பசியோ கடுகிற்று. திருவாளர் சிவசூரியம் பிள்ளை அவர்கள் தேங்காயும் மாவும் கொண்டுவந்தனர். யாங்கள் எல்லாரும் உண்டோம். ஆயினும் பசியோ தணிந்தபாடில்லை. இவ்வண்ணம் வருந்துறுக் காரத்தொழுவு அழகு நாச்சியம்மன் கோவிலை நெருங்கினேம். அவ் வமயம் சிவசூரியம் பிள்ளை அவர்கள் என்னை ஓர் செய்யுள் இயற்றுமாறு கூறினர். யான்

நேரிசை வெண்பா.

காரத் தொழுவமர்ந்து காக்கும் உமையன்னம்
ஈர மனங்குழைந்திங் கீயாளோ—ஈர
மனத்தா ளானாலும் மணவாளன் பிச்சை
அனத்தானென் செய்வான் அறி.

எனக்கூறினேன். பின்பு அவரை ஒருசெய்யுள் இயற்றுமாறு வேண்டினேன். அவர்

நேரிசை வெண்பா.

தேங்காயு மாவும் தினவடங்கத் தின்றாலும்
தாங்காப் பசியோ தணியவில்லைப்—போங்காணும்
காரத் தொழுவதனைக் காத்திருந்தும் என்னபலன்
ஆரைத் தொழுவோம்அம் மா.

என்றுடனே பாடினர். பின்பு கணியூர் வந்து சேர்ந்தோம். அங்கே நல்லுணவு கிடைக்கப் பசிதீரவுண்டு மகிழ்ந்தோம். சிவசூரியம் பிள்ளை அவர்கள் காரத்தொழுவு அழகு நாச்சியம்மனைக் குறித்துத் தோத்திரமாக ஒரு செய்யுள் இயற்ற எனக்குக் கட்டளையிட்டார். நான்

---

* இச்செய்யுளில் மூன்று மரங்களின் பெயர் வருதல் காண்க.

பன்னிருசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கங்கைசூடும் பரமருனேக் கல்யாணஞ்செய் திடும்போது
கற்பின் மிகுந்த அருந்ததியைக் காண நலஞ்சேர் அம்மின்மேல்
செங்கை மலரால் எடுத்து வைத்த சிலம்புதிகழுன் திருவடியைச்
சிறியேன் காணக் காட்டிடுவாய் தேவீ உலகை அளந்த விஷ்ணு
தங்கை யான பார்வதியே சகல லோக நாயகியே
சரணம் சரணம் எனவடைந்த தமியேன்றன்னை அஞ்சலென்
றங்கை காட்டி அழைத்தொருசொல் அம்மா நீதான் கூருயோ
அணிசேர் காரத் தொழுவிலுறை அழகுநாச்சி யுமையவளே.

என்னும் செய்யுளை இயற்றினேன்.

சில ஆண்டுகட்குமுன் தாராபுரத்திருவாளர் சி. முத்தப் பிள்ளையவர்கள் ** "தட்டான் புதியன் பணிதி பழைதெனச் சாற்றினளே" என்னும் ஈற்றடியைப் பூர்த்திசெய்யுமாறு என்பாற் கூறினர். யான்

கட்டளைக் கலித்துறை

பொட்டார் மதிநுதல் மட்டார் மொழிதரும் பொன்னையாள்
நட்டார் மனதிற்கும் எட்டாதது தனைநண்ணி முத்தம்
இட்டாள் அதிசயப் பட்டாள் காங்குவித் தேத்தி யன்பாய்த்
தட்டான் புதியன் பணிதி பழைதெனச் சாற்றினளே.

என்று பூர்த்தி செய்தேன். (தொடரும்)

நா. ஆறுமுகம்.

எனது கடிதம்

தேச முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும், தற்போது பத்திரிகைதான் அவசியம் வேண்டியிருக்கின்றது. நற்காலமாக நம் பரதநாட்டில் சில பத்திரிகைகள் வெளிவந்துலாவுகின்றது. இன்னும் வரவேண்டியதே ஆனல் கீழ்வரும் விஷயங்களைப்போல இருந்தால் நல்தியாய், முன்வரலாம், 1923-வருடம் சேலம் தமிழ் நாடு வருட அனுபந்தத்தில் சொல்லியதுபோல நாங்களும் பத்திரிகை நடத்துகின்றோம் யென்று, 1-2, பிரதிகளில் ஒருமாதிரியான விஷயங்களை யெடுத்தெழுதி பொதுஜனங்கள் ஆதரவு கிடைத்தவுடன், எங்கள் பத்திரிகை உலகமெல்லாம் உலாவுகின்றது. இதில் விளம்பரம் செய்யுங்கள் யென்று கேட்டு வாங்கி வியாபாரத்துறையில் இறங்கி விட்டதுகள். இத்தால் பத்திரிகை படிக்க சந்தா செலுத்தியவர்கள் மனம் புண்பட்டுப்போய் இருக்கிறார்கள். உதாரணமாக யெனக்குவரும் ஒரு மாதசஞ்சிகை 40 பக்கம் கொண்

** இந்த அடியை மேற்படி முத்தப் பிள்ளைக்குத் திரிசிரபுரம் இரங்மலிங்கம் பிள்ளை கூறினராம்.

டது. இதில், 36 கம்பெனிக்காரர்களுடைய விளம்பரம் இருக்கின்றது. இது ஜனங்களை யேழைகளாய் செய்யுமே யொழிய நன்மை யேது. இவ்வித துறையில் இறங்கிய ஒரு பத்திரிகை சேலம், தமிழ்நாடு, நவசக்தி, லோகோபகாரி இன்னும் பல பத்திரிகைகளில் யெங்கள் பத்திரிகைக்கு உடனே சந்தாதாரராக சேருங்கள். அரிய பெரிய விஷயங்களும் லோககாரியங்களும். பல்லோரும் படித்து பயனை அடைகிறார்கள். நீங்களும் சேருங்கள் யென்று அலங்காரத்துடன் இருந்த விளம்பரத்தை பார்த்து, இந்த ஊரில் இருந்து அனேக சந்தாதாரர்களை சேர்த்தனுப்பினேன். அவர்களும் யெனது உழைப்புக்கு வாழ்த்தி கடிதமும் யெழுதினார்கள். பத்திரிகை மூலியமாகவும் புகழ்ந்து விட்டார்கள், இப்போது இரண்டு மூன்றுபேருக்கு 1-2 பிரதிகள் தவிர அனுப்பவில்லை. சந்தா கொடுத்து சேர்ந்தவர்கள் யென்னை பழிக்கு ஆளாக்குகின்றார்கள். அயலூரில் இருந்தவர் எனக்கு பத்திரிகை கிடைக்கவில்லை யென்று கடிதம் யெழுதினார்கள். அதையும் வைத்து அவர்களுக்கு அனுப்பி நானும் கடிதங்களை யெழுதினேன். அதற்கு அனுப்புகின்றோம் யென்று கடிதம் யெழுதிவிட்டு அனுப்பவேயில்லை. மேலே காட்டியதற்கு அவர்கள் கொடுத்த உறுதிமொழிகள் எனது கைவசம் உள. இவ்விதமான பத்திரிகையை தேசத்தாரெல்லாம் அரிய தமிழ்நாடு, நவசக்தி, லோகோபகாரி இவைகளுக்கு யெழுதிப் பல்லோரும் படிக்கும் படியாய் செய்கின்றேன். பத்திரிகை பேரை வெளிப்படுத்தி நான் சேர்த்துக்கொடுத்தவர்களையும் நயப்பாட்டும்படியாய் யேற்பாடாகி வருகிறது. ரஞ்சிதன் நீடூழி வாழவேண்டுமென்றே இதை யெழுதுகின்றேன். மேல்கண்ட துறையில் இறங்கிவிடாமல் இருக்கவும் ரஞ்சிதனையும் நான் புகழமாட்டேன். தமிழ்நாட்டில் இவ்வளவு குறைவான சந்தாவுடன் நம்முன்னோர்கள் சரித்திரங்களும் நவரசம்பொருந்திய நாவல்களும் தேசிய வர்த்தமானம், வினோத விசேடம், இன்னும் பலவிஷயங்களுடன் ரஞ்சிதனையும் இன்னும் மற்றஇதைப்போல மாதசஞ்சிகைகளையும் படிக்கின்ற வாசர்களேயூகித்துக்கொள்ளக்கடவது. ஒரு வீட்டில் உள்ள ஆண்பெண், இருபாலரும், படித்து இகபரசுகங்களை நாடும்படியாக மார்க்கண்டேயர், காரைக்காலம்மையார் இவைகளை யெழுதி பாமரரும் படித்தறியும்படியாக வெளியிட்டுவரும் ஆசிரியரை தமிழ் உலகமே, போற்றக் கடமைபூண்டுளது. எனக்கு அனுப்பிய எட்டு பிரதிகளைப் படித்து வருகின்றேன் முதல் ஆண்டு பைண்டு புத்தகத்திற்கு இனிமேல் வரும் மூன்றாவது வருட சாந்தா செலுத்தும்போது அதற்கும் ஆர்டர் வரும். இங்ஙனம் ரஞ்சிதனுக்கும் சிறிது உழைப்பெடுத்து யென்னால் இயன்றவரையில் சாந்தாசேர்த்து கொடுக்கவேணுமென்று எண்ணியிருக்கும்

வீ பழனிசாமி.

சங்குபாலகன்.

8-ம் அத்தியாயம்

(353-ம் பக்கத் தொடர்ச்சி.)

சலங்காபுரிசேர்தலும் தந்தையைக்காணலும்.

சங்குபாலகன் பூசை முடித்துக்கொண்டு ஒணான் தோலை எடுப்பதற்காக வேலியைப் பார்த்தபொழுது அங்கு அதைக்காணவில்லை. உடனே திகைத்து வியப்புற்று எவர் எடுத்துச் சென்றிருப்பாரென யோசித்தான். "ஒருவேளை நம்மனைவிதான் நாம் வருவதைப்பார்த்திருந்து பின்னாலேயே வந்து வைத்த இடத்தையறிந்து எடுத்துக் கொண்டுபோய்விட்டாளோ? அல்லது மாயமாய்ப்போய்விட்டதோ எதற்கும் அவளை வினவிப்பார்ப்போம்'' என எண்ணிக்கொண்டு மனைவியிடம் திரும்பிவந்தான்.

பகலவன் (சூரியன்) திசைதப்பி இவ்விருளில் வந்துவிட்டானோ என்னும்படி நம் சங்குபாலகனின் மேனியின் ஒளி இருளை யகற்றிக் கொண்டே அவனுக்கு வழிகாண்பித்துக்கொண்டு போவது போலிருந்தது. இவன் வருவதைக்கண்டாள் மனைவி. கொண்டாள் அளவிலா காதல். இவனும் அவளைக்கண்டு காதல்கொண்டான். சிறிது வேளைசென்று, "பெண்ணே! எனது மேற்போர்வையாகிய ஒணான் தோலை நீ எடுத்து வந்தாயா? என வினவினான்.

"காதல! ஆம் யானே அதை எடுத்து வந்து நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட்டேன். இவ்வித அழகு மேனியை மறைத்து அசுத்த மேனியாக்கிக்கொள்கின்றீர்களே என்றுதான் அதைச் சாம்பலாக்கினேன். தாங்கள் அதற்காக மன்னிக்கவேண்டும்'' என்றாள் அவனுடைய மனைவி.

"பரவாயில்லை. போனதுபோகட்டும். வா சிவாலயத்திற்குச்சென்று வருவோம்'' எனக்கூறியழைத்தான். அவள் அதற்கிணங்கவும் இருவரும் சிவாலயத்திற்குச் சென்றனர். அங்கு சிவபெருமானைத் தரிசித்துத்தொழுதனர். பின்பு சங்குபாலகன் தன் மனைவிக்கு அங்குள்ள குளத்தையும் நந்தவனத்தையும் காண்பித்தான். அப்பொழுது அவன் தன்மனைவியை நோக்கிப் "பெண்ணே இதோ பார்த்தையா? நீ கொளுத்தி விட்டேனென்று கூறிய ஒணான் தோல்பழையபடி இவ்வேலியின்மீது கிடக்கின்றது இது சிவபெருமானின் மகிமையாகும்'' என்று அவ்வேலியிற் கிடந்த தோலைக் காண்பித்துத் தனக்கு அத்தோல் வந்த வரலாறு முழுதும் கூறி ஆறு திங்கள் சென்று அன்று அத்தோல் மறைந்ததையும் கூறினான். அவள் அதிசயமுற்றுச் சிவபெருமானைப் போற்றினாள்.

பின்னர் அங்கிருந்த மாபோகி, மலைபோகி என்னும் பெயருடைய இருகுதிரைகளிலும் ஆளுக்கொன்றின் மேல் ஏறிக்கொண்டு உமயாபுரியை நோக்கிவந்தனர். அப்பொழுது அப்பட்டணமெங்கும் மிக்க அழகாகச் சிங்காரிக்கப்பட்டிருந்தது. இவர்கள் வருகையைக்கண்ட உமயாபுரி அரசன் அவர்களை எதிர்கொண்டு தன் அரண்மனைக்கு வரும்படி யழைத்தான். "நம்மை அடித்துத் துரத்தின அரசனிடத்திற்கு நாம் செல்லக்கூடாது. என் தந்தையின் பட்டணமாகிய சலங்காபுரிக்குப்போவோம் வருவாய் என்றழைத்தான் தன் மனைவியை. பிறகு இருவரும் அவ்வுமயாபுரமன்னன் பார்த்துக்கொண்டிருக்கவே புரவியை வேகமாக நடத்தினர்.

வழியில் காடுகளையும் மலைகளையும் ஆறுகளையுங்கடந்து கடைசியாகச் சலங்காபுரி வந்து சேர்ந்தனர். இவர்கள் வருவதைக்கண்ட சலங்காபுரிமன்னன் தன்னிடத்திற்குத் தெய்வந்தான் வருகிற தென்றெண்ணிக்கொண்டு சங்குபாலகனையும் அவன் மனைவியையும் மிக்க அன்புடன் வரவேற்று இருவருக்கும் ஆசனமளித்து வணங்கி நின்றான். சங்குபாலகன் தன் வரலாற்றை வாயால் சொல்லாமல் அரமனைச்சுவரில் எழுத்தால் வரைந்துக் காண்பித்தான். மன்னன் அவன் எழுதியவற்றை வாசித்துப்பார்த்துவிட்டு மனம் பதறித் தன் புதல்வனைக்கட்டிப்பிடித்துக்கதறினான் நமதரசனுக்கு இப்பொழுது தான் உண்மைவிளங்கிற்று ஆ என்கண்மணி! நீ இத்துணை அபாயங்களுக்கும் தப்பிவந்தாயோ ? அச்சண்டாளிகளா உனக்கு அவ்வளவு தீங்குசெய்தனர். கடவுளன்றோ உன்னைக்காத்துவந்தார். இதோ அச்சண்டாளிகளை என்ன செய்கின்றேன்பார் எனக்கூறி மந்திரியை யழைத்து சங்குபாலகன் அன்னையைத் தவிர மற்றெல்லாரையும் சுண்ணாம்புக் காளவாயிலிட்டுச் சுட்டு விடும்படி கூறிவிட்டான். "நினைக்குங்கேடுதனக்கு" என்பதை யறியாமல் மாற்றாள் பெற்ற பிள்ளை யென அப்பிள்ளையைக்கொல்ல எத்தனித்த இப்பொல்லாப் பெரும்பாபிகள் தங்களிடம் குடிகொண்டிருந்த பொறாமையினால் சுண்ணாம்போடு சுடப்பட்டு மாண்டொழிந்தனர்.

நம் நாட்டிலுள்ள மாற்றாந்தாய்மார்களுக்கும், பொறாமை படைத்தவர்களுக்கும், பிறருக்குத் தீங்கு நினைப்பவர்களுக்கும் இந்தப்பாடு தான் என்பதை இதை வாசிக்கும் ஆண்பாலர் பெண்பாலர் அனைவரும் நன்கு உணருமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன். மாற்றாந்தாயானவள் தனக்கு முன்னிருந்தவளுடைய அல்லது பின் வந்தவளுடைய பிள்ளைகளை எப்பொழுதும் அவள் பிள்ளைகள் வேறு நம் பிள்ளைகள் வேறு என்று நினைக்காமல் தன் பிள்ளைகளைப் போலவே அவர்களை அன்புடன் பாதுகாத்து வரவேண்டும். ஒரு போதும் அப்பிள்ளைகளின் மீது வஞ்சனை கொள்ளக்கூடாது. "வஞ்சனை நெஞ்சைப் பிளக்கும்" என்பது முதியோர் மொழி.

பொறுமையும் ஒரு தீயகுணமாகும். அப்பொறுமை என்னும் ஆமை எவரிடத்தில் குடிகொண்டிருக்கிறதோ அவரையே கொல்விக்கும் இயல்புடையது பிறருக்குத் தீங்கு நினைப்பது நரகத்திற்குச் செல்ல வழிதேடுவதாகும். அவன் பிறவி ஒரு போதும் நீங்காது. "கெடுவான் கேடு நினைப்பான்" என்பது போல, தான் கெட்டுப்போவதற்கே ஒருவன் பிறருக்கு தீங்குசெய்ய நினைக்கின்றான். ஆகவே இதை வாசிக்கும் அனைவரும் இத்தகைய கொடுமைகளைப் புரியாதிருக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்,

இவரென்ன ! கதை கூறுகின்றவர் வேதாந்தம் பேசப்புகுந்துவிட்டாரென நீங்கள் நினைக்கக்கூடும் இக்காலத்தில் சிலருக்கு அப்படித்தான் குணமிருக்கிறது, சிறு பிள்ளைகளுக்குச் சர்க்கரையோடு மருந்து சேர்த்துக் கொடுப்பதுபோல இவர்களுக்குக் கதையோடு சிறிது அறிவுகூறல் நலமாயிருக்குமென்றே எனது சிற்றறிவிற் கெட்டிய வரை இக்கதையின் வாயிலாய்ச்சில நற்குணங்களையும் போதிக்க நேர்ந்தது. இனி நம் கதையைத் தொடங்குவோம்,

சங்குபாலகன் தன் அன்னையை "எங்கே, எங்கே" எனத் தனது தந்தையினிடம் வினவினான், உடனே அவனுடைய தந்தை அவளையழைப்பித்து நீராட்டி உடுத்துக் கூட்டிவரும்படி கட்டளையிட்டான் அவ்விதமே சில பணிப்பெண்கள் அவளை நீராட்டிச்சகலமுஞ்செய்து அழைத்துவந்தனர். தன் அன்னையைக்கண்ட சங்குபாலகன் ஓடிவந்து அவளுடைய அடிகளில் விழுந்து வணங்கினான் அவளும் தன் புதல்வனென அறிந்து கன்றை நெடுநாட்களாகப் பிரிந்திருந்து பிறகு கண்டபசுவைப்போலக்கதறியழுது." என்கண்ணே! உன்னை இவ்வளவுகாலமாய்ப் பிரிந்திருந்தேனே இதுவும் யான்செய்த தீவினையா?" என்று அவனைமுத்தமிட்டு ஆசிர்வதித்தாள். சங்கு பாலகனுடையமனைவியும் தன்மாமியாரென அறிந்து அவளைப்பணிந்து வணங்கினாள் அவளையும் வாழ்த்தி ஆசிர்வதித்தாள்

பின்னர் சிறிது நாட்சென்று நம் சங்குபாலகனுக்குப் பட்டம் சூட்டுதற்காகப் பட்டணமெங்கும் வெகு உன்னதமாகச் சிங்காரிக்கப்பட்டது குடிகளெல்லாம் தங்களிளவரசருக்குப் பட்டஞ்சூட்டுவதைப்பற்றி மிக்க விருப்புற்று மகிழ்ந்திருந்தனர், பட்டணமெங்கும் கடலொலி போலப் பதினெட்டுவகை வாத்தியங்கள் முழங்கின சங்குபாலகனைச் சிங்காதனத்திலமர்த்திச்செய்யவேண்டிய நியமப்படி பட்டம் சூட்டினர், பிறகு சங்குபாலகன் வெகுகாலம் மகுடாதிபதியாய்த் தனது நாட்டை முறைமை தவறாது ஆண்டுவந்தான்.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

அ. ச அருணசல ரெட்டியார்.

கல்வி

பூவுலகின்கண் அவதரித்த மனிதர்களாலே தேடற்கூடியன வாகிய பொருள்கள் கல்விப்பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். கல்வியாவது விஷயங்களைச் சரிவரத்தெள்ளிதின் ஆராய்ந்தறியும் ஞானம். கல்வியென்னும் தொழிற்பெயர், கல் என்ற பகுதியினடியாகப் பிறந்தது. பகுதி பெரும்பான்மையும் எப்பொழுதும் முன்னிலை ஒருமை ஏவல்வினை முற்ருகவேயிருக்கும். கல்வி என்ற பதத்தில் கல் என்பதற்கு தோண்டு என்பது ஒரு பொருள். எதைத் தோண்டுதலென்ருல் அறிவை. இதுபற்றியே தெய்வப்புலவராகிய திருவள்ளுவரும்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்று கூறியிருக்கின்ருர். அதாவது மணற்கிணருனது தோண்டுந் தோறும் ஊற்றுச் சுரப்பதுபோல, மக்கள் கல்வியைக் கற்குந் தோறும் அறிவு விர்த்தியாகுமென மொழிந்துள்ளார்.

கல்விப்பொருள் என்றும் அழியாதது என்ற கருத்துபொருந்த பின்வருமாறு ஒரு பெரியோர் கூறியிருக்கின்ருர்.

"தெள்ளமு தமனையகல்விப் பொருள் படைத்திடிற்
றேசமெல்லாந் துதிக்குஞ்
செயஸ்தம்ப மானபுகழ் நிலைநிற்கும் இவையலாற்
செம்பொன்மிகு செல்வம் அதுபோல
வெள்ளமதுகொ ளுமெனும் பயமில்லை கனலினல்
வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள் பறித்திடக்கூடாது சோதரர்
விரும்பினும் பங்குருது
கள்ளரால் திருடவும் முடியாது வரவரக்
கனமலாற் குறைவுருது
கருணை ஞானந் தழையும் ஆசையால் உனை இதய
கமலத்தில் வைப்ப தெளிதாம்"

ஆதலினலே கல்விப்பொருள் செல்வப்பொருளைவிட மேலானதென்பது தெற்றென விளங்கலாயிற்று.

நாம் கல்விகற்கவேண்டுமானல் சிறுபிராயத்திலே கற்கவேண்டும். ஏனென்ருல் சிறுபிராயத்திலே கற்ற கல்வி புத்தியிலே நன்ருகப் பதியும். புத்தி சமுசாரசாகரத்தில் விழுந்து வருத்தத்தை அடைந்துக் கொண்டிருக்கின்ற முதிர்ந்த பிராயத்திலே கற்ருலும் கல்வி நன்ருகப் புத்தியிலே பதியமாட்டாது. ஆதலினலன்ருே ஔவைப்பிராட்டியாரும் "இளமையிற்கல்" என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கின்ருர்.

கல்வியிலேயே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். ஒருநாள் ஊக்கமாகவும், மற்ருெருநாள் சோம்

பலாகவும் இராமல் எப்பொழுதும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்பக் கல்வியிலேயே பயிலல் வேண்டும். சோர்வடையாமல் நாடோறும் கிரமமாகச் சிறிதாயினும் நன்றாகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவர். தாம் அதிகசமர்த்தர் என்று நினைத்து ஒவ்வொருவேளையில் மாத்திரம் கற்கின்றவர் அதிகமாகத் தேர்ச்சி யடையமாட்டார்

மேலும் நாம், உலக வஸ்துக்களை பிரத்தியக்ஷமாய் அறிந்து கொள்வதற்கு எங்ஙனம் பஞ்சேந்திரியங்களோடு கூடின மனம் உபயோகப் படுகின்றதோ, அப்படியே பிரத்தியக்ஷமாய் அறியக்கூடாதவைகளை அனுமான உபமான முதலிய பிரமாணங்களால் அறிந்து கொள்வதற்கு மிகவும் கூர்மையான அறிவோடுகூடிய மனமானது அவசியமாம். மங்கலாய்க்கிடக்கின்ற அறிவானது கல்வியால் பிரகாசித்து விளங்குகின்றது. இதுபற்றியே "கண்ணகத்து அஞ்சனம் போற் கல்வி" என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். அதாவது பூமியில் மறைபட்டிருக்கும் பொருளை அறிவதற்கு அஞ்சனமாகிய மை எப்படி உபயோகப்படுகிறதோ, அப்படியே மறைபட்டிருக்கும் அறிவை விளக்குவதற்கு கல்வி உபயோகமாயிருக்கிறது.

மேலும் எவ்வழகிலும் சிறந்தது கல்வியழகு என்பதற்கேற்ப,

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு. என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

பெண்மகளிற்குக் கற்பு (Chastity) என்னும் ஆபரணம் எப்படிச் சிறந்ததோ, அப்படியே ஆடவர்க்கும் கல்வி (Education) என்னும் ஆபரணம் சிறந்ததாகும். மனிதர்களுக்கு பல அவயவங்கள் இருந்தும் இரண்டு கண்களில்லையாயின் மற்றவைகளும் சிறப்படையா. அஃதேபோல் இவ்வெண்ணெழுத்தை அறியாதவர் மற்றவற்றில் எவ்வளவு தான் பயின்றிருப்பினும் அதனால் சிறிதும் பயனில்லை. இதுபற்றியே சான்றோர்கள் அவ்விரண்டினையும் இரண்டு கண்களுக் குறிப்பிட்டார்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"
"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

மேறகூறிய பலவகைக் கல்விகளை குறைவறப்பயின்றிருப்பினும், வெளியில் பலரறிய எடுத்துக்கூறும் திறமை இருத்தல் வேண்டும். இன்றேல் அக்கல்வி சிறிதும் பயனற்றதாய் விடும். விளக்கு ஒளி பொருந்தியதே யாயினும் அது வெளிப்படாது ஒரு குடத்தினுள் இருக்குங்கால் அதன் ஒளி என்ன பிரயோஜனத்தைத் தரும்? தாம் படித்தவற்றை சகலருமறிய எடுத்துரைக்க இயலாத கற்றோரினும் கல்லாதவர்களே மிகவும் நல்லவர்களாவார். இதுபற்றியே,

" கல்லா தவருநனி நல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்'' என்றார் தெய்வப்புலவர்.

ஒருவர் கற்ற கல்விக்கு அழகாவது யாது? அவையஞ்சாது பிழையற எடுத்துரைத்தலே யன்றோ?

" கல்விக்கழகு கசடறமொழிதல்'' என்று சொல்லியிருக்கிறார். கற்றோர்கள் ஒவ்வொருநாளும் தாமடைந்த கல்வியுடன் திருப்தி கொள்ளமாட்டார்கள். தாம் மென்மேலும் நூல்களை பயில்வதுடன் தம்மைப்போலவே உலகினரையும் நல்வழிப்படுத்த முயல்வர். தாம் கற்ற கல்வியைப் பிறருக்கு எடுத்துப் போதித்து அவரும் அக்கேட்டில் விழுச்செல்வத்தை அடையச்செய்து அளவற்ற மகிழ்ச்சி யடைவார்கள். மன்னனைக்காட்டிலும் கற்றோன் சிறப்புடையோன் என்ற கருத்துக் கிணங்க,

" மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்
மன்னற்கு தன்தேச மல்லாற் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு''

என்று கற்றோனைச் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது.

கல்வியைக்காட்டிலும் நமக்கு வேறு அரிய சிநேகிதன் இல்லை.

" அறம் பொருள் இன்பம் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைக்கொடுக்கும் கல்வியி னூஉங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை''

ஆகவே நாம் உலகின்கண் தோன்றிய மானிடரறிவை மென்மேலும் பிரகாசிக்கச் செய்வதற்கு ஆதரவாயிருக்கின்ற கல்வியை ஊக்கத்துடன்கற்று நன்னிலைபெற முயலல்வேண்டும்.

தமிழபிமானி K. சாமிநாதன், எட்டையாபுரம்.

ஓர் நற்சாக்ஷிப் பத்திரம்.

நமது பரதகண்டத்தின் பொதுமக்களின் நலத்தைக் கருதியும், அறிவுவிருத்தியின் பொருட்டும் நமது இரஞ்சிதன் இரண்டு ஆண்டுகளாக உழைத்து வருகிறான் என்பது உலகறிந்த விஷயம். வியாபாரம், கைத்தொழில், கல்வி, ஆசாரசீர்திருத்தம், நவீன நாவல்கள், புராணங்கள், இதிஹாசங்கள் இன்னும் அறிவையூட்டும் பலவித விஷயங்களடங்கிய மாதாந்த பத்திரிகை இரஞ்சிதன் ஒன்றே. இரஞ்சிதனை வாசித்த நண்பர்கள் இரஞ்சிதனை வரவழைக்காம லிருக்க மாட்டார்கள். எல்லா நண்பர்களும் இரஞ்சிதனை ஆதரிக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் நமது இரஞ்சிதன் நீண்ட ஆயுளுடன் பிரகாசிக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு, தங்களன்புள்ள,
ப. சுப்பையா தேவர், மதுரை.

வேலாயுதக்கண்ணி.

(227-ம் பக்கத்தொடர்ச்சி)

26 கலிகால மென்றுனது கருத்திரங்கா திருந்தால்
சலியாரோ நின்னடியார் சண்முக வேலாயுதனே

27. பொல்லா தபிள்ளையெனப்பெற்றவ ளெள்ளாள துபோ
லெல்லார்க்கும் தாயாநீ யிரங்காய் வேலாயுதனே

28. கொஞ்சவியாதிகளின் கொடுமைய கற்றுவிடிலோ
தஞ்சமென நம்புவார் யார் சாமி வேலாயுதனே

29. பரமகுருவான பண்டிதரார் தொண்டர் தமை
திரமாம் வியா தியென்ன செய்யும் வேலாயுதனே

30. உன்னடிமை பென்று மிகவுலக மறிந் திருக்க
என்னைக் காவாவிடில் யாரிகழார் வேலாயுதனே

31. சித்தமிரங்கித் திரும்பிமுகம் பார்த்துனது
பக்தருடன் சேரவுங் கண்பாரும் வேலாயுதனே

32. நில்லா மனக்குரங்கு நின்மலமாய் நிற்கவொரு
சொல்லாலருள்வ தென்று சோதி வேலாயுதனே

33. உன்னைப்பணிய வுணர்வெனக்கு தந்தசுடர்
தன்னைப்பணியா மலருள் தாரும் வேலாயுதனே

34. உன்னையன்றி வேறுபொரு ளொன்றுமில்லை யென்றுநம்பி
சன்னதியில் வந்துனருள் தாரும் வேலாயுதனே

35. வஞ்சமடமாகின் மயக்கம் தலைக்கேறி
நெஞ்ச மலையாய் நிறுத்தும் வேலாயுதனே

36. கண்வலையை வீசிக் கருத்தைக் கவர்ந்திருக்கும்
பெண் கவலைநீங்க வருள்பெம்மான் வேலாயுதனே

37. பாலினும் நெய்போற்பருகி யிருந்த வுன்றன்
கோலமதையா ரறிவார் குழந்தை வேலாயுதனே

38. கரும்புன் மதுரமெனக் கலந்து விளங்குமுனை
விரும்பு மடியேன் வினை தீர் வேலாயுதனே

39. தேவாதி தேவாநின் றிருவடியை நம்புமெனைக்
காவா குமரா கருணை வேலாயுதனே

40. உள்ளமேகோயி லுணர்வே குருபரனுக்
கள்ளமன் றியென்னுட் கலந்த வேலாயுதனே

41. சரவணனே யென்றொரு சற்றேமன திலுன்னி
சிரவணஞ் செய்வார்க்குமுத்தி சிறந்தருள் வேலாயுதனே

42. கந்தமலையில் கடவுளர் சேனபதியென்
றிந்திரனும் போற்றி யிறைஞ்சும் வேலாயுதனே

(தொடரும்)

பழ. ச. கருப்பஞ்செட்டியார்
கீழ்ச்சிவல்பட்டி

இரஞ்சித போதினியின் இரக்தாக்ஷி வருஷத்திய
திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்

கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847—பசலி 1333—ஹிஜரி 1342
கொல்லமாண்டு 1099-1100—இங்கிலீஷ் 1924ஹூ

மார்கழி	டிசம்பர் ஜனவரி	வாரம்.	திதி	நக்ஷத்திரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்.
1	15	திங்	சது 40.55	பூச 30.8	சித் 60	கதிரறுக்க
2	16	செ	பஞ் 46.8	ஆயி 36.38	சித் 60	ஆயுதம் கொள்ள
3	17	புத	சஷ் 50.2	மக 42.3	சி 42.3 அ	யாத்திரை விலக்க
4	18	வி	சப் 52.23	பூர 45.50	சி 45.50 ம	
5	19	வெ	அஷ் 52.43	உத் 47.48	சி 47.48 அ	காலபைரவாஷ்டமி
6	20	சனி	நவ 50.55	அஸ் 47.43	மர 60	கரிநாள்
7	21	ஞாயி	தச 47.5	சித் 45.35	சித் 60	நாலுகால் ஜீவன் கொள்ள.
8	22	திங்	ஏ 41.23	சுவா 41.35	அ 41.35 சி	மத்வ சர்வ, ஏகாதசி
9	23	செ	து 34.10	விசா 36.8	ம 36.8 சி	பிரதோஷம்
10	24	புத	திர 25.23	அநு 29.25	சித் 60	தானியம் களஞ்சியம் வைக்க
11	25	வி	சது 16.23	கே 21.25	பி 21.25 அ	கரிநாள், அமாவாசை
12	26	வெ	● 6.48 பிர 57.0	மூல 14.8	அ 14.8 சி	அவமாகம்
13	27	சனி	துதி 48.40	பூரா 6.38 உத் 59.45	சித் 60	கெர்போட்ட ஆரம்பம் 56.53
14	28	ஞாயி	திரி 40.45	திரு 54.3	அ 54.3 பி	கதிரறுக்க
15	29	திங்	சது 34.18	அவி 49.43	சித் 60	மாசசதுர்த்தி
16	30	செ	பஞ் 29.30	சத 47.13	மர 60	பிரயாணம் விலக்க
17	31	புத	சஷ் 26.35	பூர 46.28	அ 46.28 சி	சஷ்டிதிதி விரதம்
18	1	வி	சப் 25.38	உத் 47.40	சித் 60	வாகனமேற
19	2	வெ	அ 26.33	ரே 50.38	அமி 60	தானியம் வாங்க
20	3	சனி	நவ 29.15	அசு 55.13	சித் 60	பிரயாணம் விலக்க
21	4	ஞாயி	தச 32.25	பர 60.0	சித் 60	
22	5	திங்	ஏகா 38.40	பர 1.50 *	சித் 15.0 ம	கிருத்திகை வைகுண்ட யேகா[தசி
23	6	செ	து 44.43	கிரு 8.38	சி 8.38 அ	கூர்மதுவாதசி
24	7	புத	திர 51.8	ரோ 15.5	சித் 60	பிரதோஷம்
25	8	வி	சது 58.5	மிரு 22.35	மர 60	ஸ்ரீநடராஜர் அபிஷேகம்
26	9	வெ	○ 60.0	திரு 30.13	சித் 60	ஆருத்ரா தர்சனம் பௌர்ணமி
27	10	சனி	பவு 4.8	புன 37.35	சித் 60	யாத்திரை செய்ய
28	11	ஞாயி	பிர 9.50	பூச 44.30	சித் 60	புஷ்யபகுளம்
29	12	திங்	துதி 15.45	ஆயி 48.13	சி 48.13 ம	போகிபண்டிகை